விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# நீதியின் துஷ்பிரயோகத்துக்கு இலங்கை அரசு உதவாது!

## அமைச்சர் பீரிஸ் உரை



(கொழும்பு)

**இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் முன்னெடுக்கும் விசாரணைகள் நீதியை துஷ்பிரயோகம் செய்யும் செயற்பாடே. எனவேதான் அந்த நடவடிக்கைக்கு நாம் ஒத்துழைக்க வில்லை. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். கொழும்பில் ஆரம்பமாகியுள்ள பாதுகாப்பு அமைச்சின் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் விசாரணைக்குழுவிடம் சாட்சியமளிப்பதற்காக பொதுமக்களுக்கு பணம் வழங்கப்படுகின்றது. இது தொடர்பான சில சம்பவங்கள் எமக்குத் தெரியவந்துள்ளன. அத்துடன் விசாரணைக்கான சான்றுகள் இரகசியமாக சேகரிக்கப்படுவதற்கான ஆதாரங்களும் எமக்கு கிடைத்துள்ளன. மனித உரிமை விவகாரம் குறித்து சில

19 ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு பிரமுகர்கள்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அடுத்த சில மாதங்களில் மூன்று முக்கிய ஆசிய நாடுகளின் தலைவர்கள் உரையாற்றவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜப்பான் பிரதமர் சின்ஷோ அபே அடுத்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

அதையடுத்து, இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பின் செப்டெம்பர் மாதம்

19 ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று அதிகாரமுறை ஆபத்தாக மாறியுள்ளது!

### சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட வேண்டும், அது தற்போது ஆபத்தான பதவியாக மாறியுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேணடும் என்பதே எமது எண்ணமாகும், இந்த பதவி தற்போது மிகவும் ஆபத்தான பதவியாக மாறியுள்ளது.

17-வது அரசியல் அமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு 18-வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு 2 ஆம் இடம்

(கொழும்பு)

உலகிலேயே அதிக மின்சாரக் கட்டணத்தை அறவிடும் நாடுகளில் முதலாவதாக இத்தாலியும் இரண்டாவதாக இலங்கையும் காணப்படுகின்றன என்று கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் சிறிமல் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் நூல்தொடர்பாக கொழும்பு தேசிய நூலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கும

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையை தண்டிக்க ஐ.நா சபையில் முயற்சி!

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இலங்கையை தண்டிக்கும் நோக்கத்துடனேயே செயற்படுகிறது என குற்றம்சாட்டியுள்ள அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் யுத்தத்தின் இறுதி கட்டங்களில நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக முரண்பாடுகள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உள்நாட்டிலேயே நாம் ஆரம்பித்துள்ளோம். எமக்கு பொருத்தமான வேகத்தில் அதனை முன்னெடுக்கிறோம்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## ராஜிதவுக்கு பஷில் ஆதரவு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள அமைச்சர் ராஜித சேனாரதனவுக்கு பூரணமான உதவி வழங்கப்படும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

கூட்டத்தில்சுமார் 6 ஆயிரம்பேரை கலந்து கொள்ள செய்து ராஜித சேனா

19 ஆம் பக்கம் பார்க்க....

## நவநீதம்பிள்ளைக்கு நன்றி தெரிவித்து கடிதம்

(ஜெனிவா)

வடக்கு மாகாணசபை மற்றும் கிழக்கு மாகாணசபை ஆகியவற்றின் 33 உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பதவியில் இருந்து விலகிச் செல்லும் நவநீதம்பிள்ளைக்கு நன்றி கூறுவதுடன், போர்க்குற்ற விசாரணைகளை விரிவாக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


போர்க்குற்ற விசாரணையை போர் இடம்பெற்ற காலத்துக்கு என்று வரையறுக்காமல் 1974 ஆண்டு முதல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று 33 பேரும் கேட்டுள்ளனர்.

இலங்கைக்குள் அனுமதிக்காவிட்டால், தமிழகத்தில் அதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும என்றும் 33 உறுப்பினர்கள் கோரி

19 ஆம் பக்கம் பார்க்க....

## பொது பல சேனாவை விமர்சிக்க மன்னார் ஆயருக்கு தகுதியில்லை

### ஞானசார தேரர் தெரிவிப்பு



(கொழும்பு)

பொது பல சேனாவை விமர்சிக்கும் தகுதி மன்னார் ஆயருக்கு இல்லை என அவ் அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இனவாதத்தை தூண்டி சர்வதேச சக்திகளை நாட்டிற்கு வரவழைக்கும் மன்னார் ஆயருக்கு பொது

19 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மோடி சந்திக்க வாய்ப்பு இல்லை

### தகவல் கசிந்தது

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை உடனடியாகச் சந்திக்க வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள தகவல்களின்படி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விருப்பம் கொண்டுள்ள போதிலும், இந்தச் சந்திப்பு உடனடியாக இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சுஸ்மா சுவராஜின் இலங்கைக்கான பயணத்துக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை புதுடில்லிக்கு அழைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மரண அறிவித்தல்



## சிற்றம்பலம் மாணிக்கவாசகர்
### (ஓய்வுபெற்ற அதிபர்)

வளலாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மாணிக்க வாசகர் (ஓய்வுபெற்ற அதிபர்) 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சிவலோகவள்ளியம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் விசாலாட்சியின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தங்கமுத்துவின் மருமகனும், சத்தியபாமா, நடேசமூர்த்தி, நாகேஸ்வரி, சந்திரேஸ்வரி, மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஸ் (லண்டன்), சுஜித்தா (லண்டன்), சுஜீவன் (லண்டன்), சுரேகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி (லண்டன்), சிறிகிருஷ்ணமேனன் (லண்டன்), சுலோசனா (லண்டன்), சசீந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சரண், சாளினி, நந்த், கிரன், சஜித் (லண்டன்), துசானி, அசானி, டிலக்சினி (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வளலாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கடத்தார் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (7442)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து 2200 பேருந்துகள் இறக்குமதி

இந்தியாவில் இருந்து ஆயிர த்து 68 கோடி ரூபா செலவில் புதி தாக 2 ஆயிரத்து 200 பேருந் துகள் போக்குவரத்துச் சபையினால் இறக் குமதி செய்யப்படும் என பிரதிப் போக் குவரத்து அமைச்சர் ரோஹண திசா நாயக்க தெரிவித்தார்.

200 பேருந்துகளை திறைசேரி நிதி ஒதுக்கீட்டிலும் 2000 பேருந்துகள் போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலும் பெறப்படுகின்றன.

பெரும் எண்ணிக்கையில் பேரு ந்துகள் கொள்வனவு செய்யப்படும் முதலாவது முறை இதுவென்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (6)

# திருத்தும் பணி 26 ஆம் திகதி ஆரம்பம்

நாடு முழுவதிலும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்ப ரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி கள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைகள் ஆணை யாளர் டபிள்யு.எம். என். ஜே. புஸ்ப குமார தெரிவித்தார்.

ஐந்தாம் தர புல மைப்பரிசில் பரீட்சை நேற்று முன்தினம் அமைதியான முறை யில் இடம்பெற்றதா கவும் பரீட்சை நடவ டிக்கையின் போது எந்தவித மோசடிக ளும் இடம்பெறவி ல்லை எனவும் அவர் தெரி வித்தார். நாடளாவிய ரீதியாக 2 ஆயிரத்து 870 மத்திய நிலைய ங்களில் இடம்பெற்ற பரீட்சையில் 3 இலட்ச த்து 35 ஆயிரத்து 585 பரீட்சார்த்திகள் தோற் றியுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர் வாகத் தெரிவும் எதிர் வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத் தில் நடைபெறவுள்ள தால் அங்கத்தவர் கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரத லிங்கம் தெரிவித்தார். (6)

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

***இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2013/2014 (வெளிவாரி)***

***Bachelor of Business Management (online) Degree Programme-2013/2014 (External)***

### புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை -2013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தி னால் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால இணையவழி வியாபார முகாமைத் துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***அனுமதிக்கான தகைமைகள்:-***

✤ க.பொ.த. (உ/த) பரீட்சை- 2012 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**அல்லது**

✤ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

***முக்கிய குறிப்பு:-*** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக் காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

***மாணவர் தெரிவு:-*** விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

***விண்ணப்பப்படிவங்க ளைப் பெறுதல்:***

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் அலகில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 1000 இற்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், ***உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சை கள் அலகு, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி*** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியும்.
2. விண்ணப்பப்படிவத்தினை *www.jfn.ac.lk/bbm* எனும் இணைய முகவரியி லும் பெற்றுக் கொள்ளலாம்.

***விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:***

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "***இணைய வழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு***" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

***விண்ணப்ப முடிவுத் திகதி:-*** **05.09.2014. (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு ***021 222 1106, 021 222 3610, 021 222 3612*** என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**18.08.2014**


## யாழ். நகரில்...



கேசவன் புத்தக நிறுவனம்
யாழ். Rashmi புக் மார்ட்
நிறுவனம் இணைந்து வழங்கும்
தமிழ்ப் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம்:- யாழ். தட்டாதெரு சந்தி, ரஷ்மி புக்மார்ட் முன்றலில்
காலம்:- ஒகஸ்ட் 15 முதல் 28 வரை



அழகு தமிழில்
ஆயிரக்கணக்கான புத்தகங்கள்
மிகவும் மலிவான விலைகளில்...

அரிய சந்தர்ப்பம்... அனைவரும் வருகை தருக...

வாசிப்பை நேசிக்க வைப்போம்...

(சி-8234)

S.கேசவமூர்த்தி 077 222 8980



## சேவை நலன் பாராட்டு

**திருமதி.மகேஸ்வரி குணராசா**
B.A (P.D.G.E) S.L.T.S.I



எமது கல்லூரியில் 10 ஆண்டுகளிற்கு மேலாக ஆசிரிய சேவையாற்றி 18.08.2014 இல் ஓய்வு பெறும் திருமதி. ம.குணராசா அவர்களின் சேவையினை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

க/கட்டுகஸ்தோட்டை சாஹீரா கல்லூரி
1984-1989
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
1989-1991
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
1991-1997
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
1997-2000
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
2000-2004
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
2004-2014

**கல்லூரி சமூகம்,**
**யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

(7437)


# இராசி பலன்

**19.08.2014**
**(ஆவணி 03, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**
**நவமி முற்பகல் 11.30 மணிவரை**
**ரோகிணி மாலை 6.19 மணிவரை**
**இராகுகாலம் 3.05-4.35 மணிவரை**
**சுபநேரம் 10.35-12.05 மணிவரை**
**அமிர்தசித்தம்**

**வளவன்**

**மேடம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், யோசிக் காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**இடபம்** — தொழில் நலன்கருதிய பயண மொன்றை மேற்கொள்வீர்கள், பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரை திடீரெ னச் சந்திக்கலாம், பிற இனத் தவரால் பெருமைகள் சேரலாம்.

**மிதுனம்** — குடும்ப பெரியவர்களின் ஆலோ சனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் பொறுப்பு கள் வந்து சேரலாம்.

**கடகம்** — அதிர்ஷ்டகரமான நாள், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், தொலை பேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரி யாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்ப தில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும்.

**கன்னி** — அதிகம் செலவாகும் என நினை த்த காரியமொன்று குறைந்த செல வில் முடியலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கசப்புணர்வுகள் குறை யும், வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள்.

**துலாம்** — விட்டுக்கொடுத்துச் செல் வதன் மூலம் முன்னேற்றம் பெறு வீர்கள், அடுத்தவர் விவகார ங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** — பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும் நாள், பிறரிடம் ஒப் படைத்த பொறுப்புக்கள் மீண் டும் உங்களிடம் வந்து சேர லாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** — வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், கொடுக்கல் வாங் கல்கள் ஒழுங்காகும், நோயிலி ருந்து நிவாரணம் பெறுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர் கள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** — செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், தாய்வழி உறவினர்களால் நன்மையு ண்டு, கல்வியில் ஆர்வம் காட் டுவீர்கள், ரோக பயமுண்டு.

**மீனம்** — இனிய அனுபவங்கள் ஏற் படும் நாள், பொதுநல ஈடுபாட் டால் புகழ்பெறுவீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சகோதர வழி யில் ஒற்றுமை மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்சிகிச்சை பிரிவு வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே இயக்கம்

(வடமராட்சி)


வல்வெட்டித்துறை ஊரணி பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு வாரத்தில் இரு தினங்களில் மட்டும் இயங்கி வருவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு் தினங்கள் மட்டும் நடைபெறுகிறது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் காலையில் வரும் பற்சிகிச்சை நோயாளர்கள் மாலை நேரம் மட்டும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த இரு தினங்களும் தவிர்ந்தால் பற்சிகிச்சை நோயாளர்கள் பற்சிகிச்சைக்காக ஏனைய வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பற்சிகிச்சை இடம்பெறும் நாட்களை நான்கு அல்லது ஐந்து நாட்கள் அதிகரித்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-42)




## ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் இடம் பெறவுள்ளதால் அனைத்து ஆங்கில ஆசிரியாகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(தும்பளை)

வடமராட்சியில் புகழ்பூத்த கம்பர் மலை வல்வை அருள் மிகு வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 27 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை வல்வை ஊரணி கடலில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-20)

# தமிழர்களின் வாழ்வாதாரம் முன்னேற தமிழ் தே.கூட்டமைப்பு தடையாகவுள்ளது

உதவியாக உங்களுக்கு கிடைக்கும் சலுகைகளை நீங்கள் தவறான வழிகளில் உபயோகிப்பதால்தான் அவற்றை பூரணப்படுத்த முடியாத மகளாக தொடர்ந்தும் இருக்கின்றீர்கள்.

இத்தகைய செயற்பாடுகளை கைவிட்டு உங்கள் வாழ்வாதாரத்துக்கு கிடைக்கும் உதவிகளை சரியான வகையில் பயன்படுத்துங்கள். அதன்மூலம்தான் வாழ்வாதாரத்தில் முன்னேற்றங்காண முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு இறக்குறானை பகுதி மக்களது அடிப்படை வாழ்வாதார பிரச்சினைகளை மேம்படுத்துவது தொடர்பாக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பு நேற்று முன்தினம்அப்பகுதி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு பிரதேசமானது ஒவ்வொரு தனி மனிதனது வாழ்வாதார வளர்ச்சியிலிருந்துதான் வளர்ச்சியடைகின்றது.ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு அப்பிரதேசத்திலுள்ள அனைத்து பொது அமைப்புகளும் பங்கேற்று உழைப்பது அவசியமானது.

மக்கள் தமது பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் போதுதான் அதற்கான தீர்வையும் கண்டுகொள்ள முடியும். நீங்கள் உங்களது பிரச்சினைகளை எங்களிடம் கொண்டுவந்தால் அதற்கான தீர்வுகளை பெற்றுத்தர தயாராகவுள்ளேன்.

ஆயுதப்போராட்டத்தின் மூலம் தோற்கடிக்கப்பட்ட இனமாக தமிழர்கள் இலங்கையில் வாழும் ஒரு தரப்பினரால் கருதப்பட்டாலும் அதன் விளைவுகளிலிருந்து வரும் தாக்கங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது இணக்க அரசியல்மூலம் தமிழ் மக்களை பாதுகாத்து வருகின்றார்.

வடபகுதி மக்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யக்கூடிய அதிகாரம் வடமாகாண சபையிடம் உண்டு. ஆனால் எந்தவொரு அபிவிருத்தி வேலைகளையும்மக்களுக்காக செய்யாது வெளிநாடுகளிலுள்ள ஒரு சில தமிழர்களின நிகழ்ச்சி நிரலின் கீழ் தற்போதைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் செயற்பட்டு வரு வதால் சுயநலமான முடிவுகளையே அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இதனால்தான் மக்களது வாழ்வியலை அபிவிருத்தியடையச் செய்வதில் பின்னடிப்புச செய்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## ஆலய மஹோற்சவம் தொடர்பான கூட்டம்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டைமானாறு மாதர் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலானது நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு குறித்த மாதர் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் இடம் பெறவுள்ளதாக முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(6-19)




# நாவற்குழி 300 வீட்டுத்திட்ட மக்கள் அடிப்படை வசதி செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசித்துவரும் மக்கள் தமக்கு அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கோரிக்கை விடுத் துள்ளனர்.

தமது வீடுகள் உடைந்த நிலை யிலும் கூரைகளற்ற நிலையிலும் மலசலகூட வசதிகள் அற்ற நிலை யிலும் காணப்படுகின்றன.

2004ஆம்ஆண்டு மீளக்குடி யேற்றப்பட்ட தமக்கு இதுவரை எது வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என்றும் அம் மக்களால்கவலைவெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கடந்த சனிக்கிழமை நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்துக்கு விஜயம் செய்து அப்பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். இதன்போதே அந்த மக்கள் தமது ஆதங்கத்தை இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டுத்திட்டத்தில் 294 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 60 வீடுகள் கூரைகளற்ற நிலையில் மரங்களின்றி காணப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு இந்த வீட்டுத்திட்டதினை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரன் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இதன் பின்னர் இந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். 2009 ஆம் ஆண்டு இவர்கள் மீளக் குடியேற்றப்பட்ட போதிலும் வீடுகள் எதுவும் மீள் நிர்மாணம் செய்யப்படவில்லை.

இதனால் முற்றாக சேத மடைந்த வீடுகளில் எதுவித அடிப் படை வசதிகளுமின்றி இந்தக் குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்ற போதிலும் அது குறிப்பிட்டதரப்பினருக்கு மட்டுமே வழங்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இங்கு 30 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் வசித்த வருகின்ற போதிலும் அவர் களுக்கும் உரிய உதவிகள் கிடைக்கவில்லை.

இங்கு 61குடும்பங்கள் வீட்டு வசதி இல்லாத நிலையிலும் 90 குடும்பங்கள் மலசலகூட வசதிகளற்ற நிலையிலும் வசித்து வருகின்றன. இங்குள்ள சான்றோர் சனசமூக நிலையமும் மூடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பத்திரிகைகளைக் கூட வாசிக்க முடியாத நிலை நிலவுகின்றது. இந்த சனசமூக நிலையத்தை திறக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபைக்கு தாம் கடிதம் சமர்ப்பித்த போதிலும் அது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் இங்கு வாழும் பொதுமக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டுள்ளனர்.

இங்கிருந்து பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் நான்கு கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள் ளது. காலையில் 7.30 மணிக்கு ஒரேயொரு பேருந்து சேவையே இதற்கென நடத்தப்படுகின்றது.

இந்த பேருந்தினை அம்மாணவர்கள் விட்டால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் முறையிட்டுள்ளனர். (6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாட்சியம் அளிப்பார்களாயின் உடன் கைது செய்ய வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கொணடு இராணுவத்திற்கு எதிராக எவரேனும் சர்வ தேசத்திடம் சாட்சியமளிப்பார்களாயின் அவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சர்வதேச விசார ணைக் குழுவிடம் சாட்சியமளிப்பதாக கூறும் மங்கள சமரவீர, மாவை சேனாதிராஜா ஆகியோரை அரசாங்கம் உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.


மாவை எம்.பி.


குணதாச அமரசேகர


மங்கள சமரவீர

இலங்கை விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா. குழுவினரிடம் சாட்சியமளிப்போம் என தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஆகியோர் தெரிவித்துள்ள நிலையில் இவ்விடயம் தொடர்பில் வினவிய போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தற்போது முடிவிற்கு கொண்டு வரப்பட்டு ஐந்து ஆண்டுகளையும் கடந்து விட்டது. தற்போது வடக்கில் அமைதி நிலவுகின்றது. தமிழ் சிங்கள மக்களிடையே முரண்பாடுகள் இல்லாத நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகிய பிரிவினை வாதக் கட்சிகள் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தத்தினை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையில் இடம்பெறாத யுத்த குற்றங்கள் தொடர்பில் பொய்யான சாட்சியங்களை உருவாக்கி சர்வதேசத்திடம் வழங் குவது தேசத்துரோக செயற்பாடுகளே. அதை சாதாரண பொதுமக்கள் செய்தாலுமோ அல்லது அரசியல் தலைவர்கள் செய்தா லுமோ அது தேசத்துரோக செயற்பாடாகவே அமையும்.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தம் பக்க சாட்சியங்கள் பலவற்றை சர்வதேசத்திடம் வழங்கி வருகின்றனர். அதே பாதையினை தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சியும் பின்பற்ற ஆரம்பித்துள்ளது. தமது தேவைகளுக்காகவும் சர்வதேசத்தின் பணத் திற்காகவும் நாட்டை சீரழிக்க முயற்சிக்கும் மாவை சேனாதிராஜா, மங்கள சமரவீர ஆகியோரை அரசாங்கம் உடனடியாக கைது செய்து தக்க பாடம் கற்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (6)


**வலம்புரி- சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்**

**வடமாகாணத்தில்**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள- நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ . இல, தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக் கூடிய, உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.08.2014**

குறிப்பு:-நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்

**பிரதம ஆசிரியர், வலம்புரி**



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**அகில இலங்கை ரீதியாக**
காற்பந்தாட்ட விசேட திறமையடிப்படையிலும், தலைமைத்துவபயிற்சியினாலும் தெரிவு செய்யப்பட்ட 16 வயதிற்குட்பட்ட 2 மாணவர்களில் ஒருவராக

**ஞானேஸ்வரன் அன்ரனிராஜ்**

தெரிவுக்குள்ளாகி விசேட பயிற்சிக்காக ஜேர்மன் நாட்டிற்கு பயணிப்பதையிட்டும், அண்மையில் "என் படகின் பாதை" எனும் கவிதை நூலை வெளியிட்டதையிட்டும், இப் பயணம் 4வது வெளிநாட்டுப்பயணமாக அமைவதையிட்டும், கொழும்பு ஆனந்தா கல்லூரியினால் நடத்தப்பட்ட சாம் சமரசிங்க கிண்ணத்திற்கான 17 வயதிற்குட்பட்ட போட்டியில் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருதை பெற்றமையையிட்டும் அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்





வாழ்த்துவோர்,
புனித வளனார் ஆண்கள் விடுதி சமூகம்,
இளவாலை.

C 8233



**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 36 ¾ செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம் (கனடா சிற்றிசன்)
தொ.இ: B/361

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 37 ½ செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (UK – Not PR)
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/1722

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 15
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc / நிரந்தர அரச உத்தியோகம்
தொ.இ: B/1724

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 24
உயரம்: 164 cm
தகைமை/தொழில்: BIT / ஆசிரியர்
தொ.இ: B/1729

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 13 ¼ செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/2571

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 45 ¾ சூரி செவ் 7 இல்
தகைமை/தொழில்: BIT, AAT / நிரந்தர அரச உத்தியோகம்
தொ.இ: G/2573

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 58
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc
தொ.இ: G/2578

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 27· ½ செவ் 4, இல்
தகைமை/தொழில்: O/L / மருந்து கலவையாளர்
தொ.இ: G/2579

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை தலையிட அனுமதிப்பது அழிவினை தேடிக் கொள்ளும் செயல்

காணாமற்போனோரை கண்டறியும் செயற்பாடுகள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதே. எனினும் இவ் ஆணைக் குழுவும் சர்வதேசத்துடன் இணைந்து செயற்படுவதை வன்மையாக கண்டிக்கின்றோம் என தெரிவிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆணைக் குழு விடயத்தில் மிகப் பெரிய தவறினை அரசாங்கம் செய்கின்றது. சர்வதேச நிபுணர் குழுவினை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க சர்வதேச நிபுணர் குழுவினை நியமித்துள்ளமை தொடர்பில் அரசியல்வாதிகளின் கருத்தினை செவிமடுக்கமாட்டேன் என ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அரசாங்க பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட காணாமற்போயுள்ள பொது மக்களை கண்டறியும் நோக்கில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகவும் அமைந்துள்ளது. காணாமற்போனோரை கண்டறியும் செயறபாடுகளை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவினர் செய்து வருகின்றனர். இதற்கு நாம் ஒரு போதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எனினும் சுயாதீன உள்ளக செயற்பாடுகளில் சர்வதேசத்தினை இணைத்துக் கொள்வதனையே நாம் எதிர்க்கின்றோம்.

இலங்கையில் முப்பது வருடகாலமாக நிலவிய பயங்கரவாதத்தை எமது தனிப்பட்ட சக்தியினாலேயே அழித்தோம். யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதில் அரசாங்க பங்காளிக் கட்சியின் ஜாதிக ஹெல உறுமயவினதும் அன்று அரசுடன் இருந்த ஜே.வி.பி. யினதும் பங்கு முக்கியமானதாகும். விடுதலைப் புலிகளிடம் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை சர்வதேசம் செய்யவில்லை. மாறாக தீவிரவாதத்தை பாதுகாக்கும் செயலை மேற்குலக நாடுகள் மேற்கொண்டன. எமது தனித்துவத்தின் மூலமாகவே யுத்தத்தை முறியடித்தோம்.

எனவே அதற்கான தீர்வு விடயத்திலும் அரசாங்கமே செயற்பட வேண்டும். எமது உள்ளக செயற்பாட்டின் சர்வதேசத்தை தலையிட அனுமதிப்பது எமக்கு நாமே அழிவினை தேடிக் கொள்ளும் செயற்பாடாகும். இதனை நோக்கி அரசாங்கம் நகரக்கூடாது என்பதையே நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

எனினும் தற்போது காணாமற்போனோர் விடயத்தில் ஆணைக்குழுவின் விடயத்தில் எமக்கு திருப்தியில்லை. சர்வதேச ஆலோசனைக் குழுவினை நியமிப்பது எமக்கு பாதகத்தினை ஏற்படுத்தும். ஐ.நா. குழுவினருடன் இணைந்து செயற்படும் இவர்கள் இலங்கை விடயத்தில் நியாயமாக செயற்பட ஒரு போதிலும் வாய்ப்பில்லை. இவர்கள் ஆலோசனைக்குழுவென்ற பெயரில் வந்தாலும் இறுதியில் இவர்களின் மூலமாகவும் சர்வதேசத்தை பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது உறுதியாகும். எனவே, அரசாங்கம் உடனடியாக இவ் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் நவநீதம்பிள்ளைக்கும் அஞ்சி எமது தேசத்தை காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாம் அரசாங்கத்துடன் கைகோத்திருப்பது அரசாங்கத்தை பலப்படுத்த மட்டுமில்லாது இந்த நாட்டையும் பாதுகாக்கவே ஆகும். எனவே, எமது கருத்துக்களுக்கும் அரசாங்கம் செவிமடுத்து செயற்பட வேண்டும்.

காலம் கடந்து எமது கையை மீறி அனைத்தும் நடந்த பின்னர் யாரையும் விரல் நீட்டாது இப்போதே சர்வதேச சக்திகளில் இருந்து விலகிக் கொள்வது எமக்கே பாதுகாப்பானது எனவும் தெரிவித்தார். (6)

# 20 ஆயிரம் முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு இதுவரை சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த குழுவினால் இதுவரை ஆறு கட்டங்களாக் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முனனெடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக கடந்த 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை மன்னாரில் இந்த நடவடிக்கைகள் இடம் பெற்றன. இதன்போது 187 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வருடம் ஜனவரி மாதம் கிளிநொச்சியிலும், பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்திலும், மார்ச் மாதம் மட்டக்களப்பிலும், முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் ஜூன் மாதம் முல்லைத் தீவிலும் ஜூலை மாதம் மீண்டும் மட்டக்களப்பிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 40 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 |
| தக்காளி | 60 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 40-80 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 120 |
| பாகற்காய் | 60 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 120 | 60 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 80 | 80 |
| போஞ்சி | 80 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 110 | 100 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 110

கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்





மதீசன் கணேஷ்

விடியற் காலை 3 மணி. மழை வேறு பெய்து கொண்டிருந்தது. ஒரு வீட்டில் கணவன், மனைவி தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. கணவன் மட்டும் எழுந்து போனான். கதவை திறந்தால் அங்கே ஒரு குடிகாரர் நின்று கொண்டிருந்தார். "சார் ஒரு உதவி... கொஞ்சம் அங்க வந்து தள்ளி விட முடியுமா?" என்று அந்த குடிகாரர் கேட்டார். கணவனோ "முடியவே முடியாது ஏம்பா விடியற் காலை 3 மணிக்கு தொந்தரவு செய்யறே"ன்னு சொல்லிட்டு கதவை சாத்திட்டு படுக்கப் போய் விட்டான்.


"யாரது?" என்று மனைவி கேட்டாள். "எவனோ ஒரு குடிகாரன், வந்து காரையோ எதையோ தள்ளி விட முடியுமான்னு கேட்கிறான்" "நீங்க உதவி செஞ்சீங்களா?" "இல்லை அதிகாலை 3 மணி, மழை வேற பெய்யுது எவன் போவான்?" "பார்த்தீங்களா? 3 மாசம் முன்னாடி நம்ம கார் ரிப்பியராகி நடு ரோட்ல நின்னப்ப இரண்டு பேர் நமக்கு உதவி செஞ்சாங்களே? இப்ப நீங்க அது மாதிரி உதவி செய்யலைன்னா எப்படி? கடவுள் குடிகாரர்களையும் நேசிப்பார்" கணவன் எந்திரிச்சான், ட்ரஸ் பண்ணிக்கிட்டு மழையில் நனைஞ்சுக்கிட்டே வெளியே போனான். இருட்ள மழையில் சரியா தெரியாததால சத்தமா கேட்டான்.

" ஹலோ, நீங்க இன்னும் இருக்கீங்களா?"
"ஆமா சார்"
"ஏதோ தள்ளி விடனும்னு சொன்னீங்களே, இப்ப செய்யலாமா?"
" ஆமா சார் வந்து கொஞ்சம் தள்ளிவிட்டீங்கன்னா நல்லா இருக்கும்"
" எங்கே இருக்கீங்க"
**"இங்க தான் ஊஞ்சல் மேல உட்கார்ந்திருக்கேன் வாங்க சார் வந்து தள்ளிவிடுங்க..."**

துர்ஷி துஷி




தனுஜா தனுஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மீறல் மனுவை மாவட்டத்திலிருந்தே உயர்நீதிமன்றில் தாக்கல் செய்ய முடியும்

## முல்லைத்தீவில் பிரதம நீதியரசர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யக் கூடிய தொழில்நுட்ப வசதிகளை விரைவில் ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் தயாராகி வருவதாக பிரதம நீதியரசர் மொஹான்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாங்குளம் பகுதியில் சுற்றுலா நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

முல்லைத்தீவுநீதிமன்றுக்கு நேற்று விஜயம் செய்த பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா, சட்டத்தரணிகளின் சங்கத் தலைவர் கங்காதரன் மற்றும் ஏனைய சட்டத்தரணிகள் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணிகளால் வரவேற்றனர்.

பல வருடங்களாக உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படாத முல்லைத்தீவு நீதிமன்றத்தை கடந்த 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் திறந்து வைத்தார்.

நீதிமன்றத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


முல்லைத்தீவு மாவட்டம் நீண்ட காலப் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததை நான் அறிவேன்.

இந்த மாவட்டத்திற்கு முதன்முறையாக தற்போது தான் நான் விஜயம் மேற்கொண்டுள்ளேன். இந்த விஜயம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. வடக்கில் இடம்பெற்று வந்த போர் முல்லைத்தீவில் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. இதன்பின்னர் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நீதிமன்றத்தை திறந்து வைப்பதையிட்டும்நான்மகிழ்ச்சியடைகின்றேன்.

முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு மாங்குளத்தில் சுற்றுலா நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தபடியே அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யக் கூடிய தொழில் நுட்ப வசதிகள் விரைவில் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)







# இந்தியன் வீட்டுத்திட்டத்தில் மோசடி முல்லை. மாவட்ட மக்கள் ஆதங்கம்



திருமணமாகாத அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டத்தில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த செயலர் பிரிவு மக்களுக்கு இன்று வரை நிரந்தர இந்தியன் வீட்டுத்திட்டமானது மீள்குடியேறி நான்கு வருடங்கள் கடந்தும் இன்னும் முழுமையாக கிடைக்க வில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு வழங்க புள்ளியிடும் முறை பின்பற்றப்படுகிறது என பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறை பின்பற்றப்படுவதால் வன்னியில் இடம் பெற்ற யுத்தத்திற்கு முன்னர் ஒரு குடும்பத்தில் 5,6,7,8 அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பங்கள் இறுதி யுத்தத்தில் தமது அங்கத்தவர்களை இழந்து தற்போது குறைந்த அங்கத்தவர்களை கொண்டு காணப்படுகிறது. இவ்வீட்டுத்திட்டத்தில் 10 புள்ளிகளுக்கு மேல் பெற்ற குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர இந்தியன் வீட்டுத் திட்டம் வழங்கப்படுகிறது.



கொக்கிளாயில் இரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்படவில்லை

ஆனால்ஓரிரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் குறித்த புள்ளியை அடையாத காரணத்தால் அவர்களுக்கான இந்தியன் வீட்டுத் திட்டம் மறுக்கப்படுகிறது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உயிரிழப்புக்குபுள்ளிகள்வழங்கப்படுவதில்லை.

18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு புள்ளித்திட்டம் வழங்கப்படுவதில்லை.

திருமணம்செய்து குழந்தைகளுடன் காணப்பட்டால் அக் குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படுகிறது.



கள்ளப்பாட்டில் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படவில்லை

போரில் கணவனை இழந்து பிள்ளைகளை இழந்து காணாமற்போய் யுத்தத்தில் காயப்பட்ட, ஒரு குடும்பத்தில் தாயுடன் 38 வயதில் ஒரு பிள்ளை இருந்தால் அக் குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் யுத்தத்தின் போது வேறு இடங்களுக்கு சென்று அங்கு வீடு அமைத்து வாழ்ந்த மக்களுக்கு மீண்டும் முல்லைத்தீவில் இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. வீடு உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் இவ்வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரு அங்கத்தவர்களைக் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திருமணம் செய்யாத ஒரு அரச உத்தியோகத்தர்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதென்றால் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஓரிரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு நிரந்தர இந்தியன் வீட்டுத்திட்டத்தை ஏன் வழங்க முடியாது என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் கவனமெடுத்து பாதிக்கப்பட்ட ஓரிரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் இந்தியன் வீட்டுத்திட்டத்தைப் பெற வழி சமைத்துத் தர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

## கலாசார விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

பூநகரி கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் 4 ஆவது ஆண்டு கலாசார விழாவும் பூந்துணர் நறவம் -4 சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. இவ்விழாவையொட்டி மேற்படி கலாசாரப் பேரவையால் திறந்த போட்டியாக பொது அறிவு வினா விடை போட்டி நடத்தப்படவுள்ளது. இதற்காக 20 வினாக்கள் அடங்கிய வினாக் கொத்தொன்று வெளியிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் அனைத்து பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் பங்கேற்க முடியும்.

இவ்வினாக்கொத்தை 20 ரூபா செலுத்தி பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

முற்றிலும் சரியான விடைகள் எழுதியோரில் இருந்து பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். இதில் முதலாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 6ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். மேலும் 10 பேருக்கு ஆயிரம் ரூபா ஆறுதல்பரிசும் வழங்கப்படவுள்ளது. வினாப்பத்திரங்களை பூநகரி கிராம சேவையாளரிடமும் பிரதேச கலாசாரப் பேரவையிலும் பெற்றுக் கொள்ள முடியுமென பூநகரி பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.(2-84)








சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முத்தமிழ் [illegible] பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இப்பேரவையின் தலைவர்

(படங்கள் :- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரியும் போர் முரசும்!

ஒரு காட்டில் இருந்த நரி ஒன்று பசியால் வாடித் தொண்டை வறண்டுபோன நிலையில் இரை தேடிய படி காட்டில் சுற்றித் திரிந்தது.

காட்டின் ஒரு பக்கத்தில் அரசனின் போர்க் களத்தை அது பார்த்தது. அப்படிப் பார்த்துக் கொண்டு அங்கே நரி நின்று கொண்டிருக்கும் போது பலத்த சத்தம் ஒன்று கேட்டது. அதைக் கேட்டதும் நரிக்கு மனக் கலக்கமும் கவலையும் உண்டாயிற்று.

ஐயோ நம் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதே! யார் இப்படிச் சத்தம் போடுகிறார்கள்? அது என்ன மிருகமாக இருக்கக் கூடும்? என்று யோசித்தபடி அங்கும் இங்கும் பார்த்தபோது மலை போன்ற பேரிகை ஒன்று அங்கே இருப்பதை அது கண்டது. இதிலிருந்து சத்தம் தானாக வருகிறதா? அல்லது யாராவது உண்டாக்குகிறார்களா? என்று அது யோசித்தது.

காற்று வீசுகின்றபோது ஏற்படும் அசைவினால் நாணல் நுனிகள் பேரிகையின் மீது படும்போது எல்லாம் சத்தம் கிளப்பும். பிறகு சத்தம் அடங்கிவிடும். நரி அதைக் கண்டுகொண்டது.

பேரிகைக்கு சுயமான சக்தி இல்லை என்பதைத் தெரிந்து கொண்டவுடன் மெதுவாக அதன் அருகில் சென்றது. பிறகு மிக ஆவலோடு பேரிகையின் இரண்டு பக்கங்களிலும் அடித்துப் பார்த்து அது ஆனந்தம் அடைந்தது.

ஆகா, வெகு நேரம் கழித்து நமக்கு நல்ல இரை கிடைத்திருக்கிறது. நிச்சயமாக இதில் கொழுப்பும் மாமிசமும் நிறைய இருக்கும் என்று நரி எண்ணியது. உடனே பேரிகையின் ஒரு பக்கத்தைக் குடைந்துகொண்டு அதன் உள்ளே புகுந்தது. பேரிகையின் தோல் கெட்டியாக இருந்தபோதிலும் நல்ல வேளையாக நரியின் பல் உடையவில்லை. அது உள்ளே புகுந்து பார்த்தபோது அதில் வெறும் தோலும் மரக் கோல்களுமாக இருக்கக் கண்டு ஏமாற்றம் அடைந்த அந்த நரி கீழ்க்கண்ட பாடலைப் பாடியது. இது கொழுப்பும் மாமிசமும் நிறைந்தது என்று நினைத்தேன்... உள்ளே நுழைந்து பார்த்தபோதுதான் வெறும் தோலும் குச்சிகளும் தான் அதில் இருக்கிறது என்பதைக் கண்டேன்.

அதனால்தான் அரசே சத்தத்தைக் கேட்டு கலக்கம் அடையக் கூடாது என்கிறேன் என்றது தமனகன்.

என் பரிவாரங்கள் அனைத்தும் இந்த சத்தத்தைக் கேட்டு பயமும் கலக்கமும் கொண்டு ஓடப் பார்க்கின்றனவே. அவற்றைத் தைரியம் சொல்லி இருக்கச் சொல்வது எப்படி? என்றது பிங்களகன்.

அரசே அது அவர்கள் குற்றம் அல்ல. எஜமானர்களுக்கு ஏற்ற மாதிரிதான் ஏவலாளர்கள் வந்து சேருகிறார்கள். குதிரை, ஆயுதம், வீணை, நூல், சொல், ஆண், பெண் எல்லாம் பயன்படுவதும் பயன்படாததும் அதை உபயோகிக்கிறவனுடைய திறமையைப் பொறுத்திருக்கிறது என்றது.

தொடர்ந்து நான் போய் அந்த விலங்கைப் பார்த்து வரும் வரையில் நீங்கள் தைரியமாக இங்கேயே இருங்கள். திரும்பி வந்த பிறகு உசிதம்போல் செய்யலாம் என்றது தமனகன்.

என்ன நீ அங்கே போக விரும்புகிறாயா? என்று கேட்டது பிங்களகன்.

அரசன் கட்டளையிடும்போது இது தகும். இது தகாது என நல்ல ஊழியன் பார்த்துக்கொண்டிருக்க மாட்டான்.


எஜமானர் கட்டளையிடுகிறபோது நல்ல வேலைக்காரன் பயப்படமாட்டான். எரிகின்ற நெருப்பில் இறங்கச் சொன்ன போதிலும் விருப்பத்தோடு இறங்கத் தயாராகிவிடுவான். கடலைக் கடக்கச் சொன்னாலும் களிப்போடு கடக்க முற்படுவான்.

அரசனுடைய கட்டளையைக் கேட்டு இது எளிது, இது கடினம் என்று எடுத்துக் கூறிக்கொண்டிருக்கும் வேலைக்காரனை அரசன் தன்னுடைய அமைச்சராகக் கொள்ளமாட்டான் என்றது தமனகன்.

அதைக் கேட்ட பிங்களகன், நல்லது, அப்படி என்றால் நீ போய்வா! உன் காரியம் வெற்றி பெறட்டும் என்று தமனகனை வாழ்த்தி அனுப்பியது. தமனகன் சிங்கத்தை வணங்கி விட்டு, சஞ்சீவகனுடைய சத்தத்தைப் பின் தொடர்ந்தவாறு அதைத் தேடிச் சென்றது.

தமனகன் சென்ற பிறகு பிங்களகன் திகிலோடு யோசிக்கத் தொடங்கியது. என் மனதில் இருப்பதையெல்லாம் மறைக்காமல் அப்படியே அவனுக்குத் தெரிவித்துவிட்டேனே! அப்படி நான் செய்தது சரியல்ல. இருவரிடமும் கைக்கூலி வாங்க நினைத்தோ அல்லது அவனை வேலையிலிருந்து நீக்கியதற்காகவோ தமனகன் என்னை ஒருவேளை காட்டிக்கொடுக்கக்கூடுமே. ஒரு பழமொழி கூறுவது போல்............

(தொடரும்)



## 08.2014 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1862 - மினசோட்டாவில் லகோட்டா பழங்குடியினர் நியு, ஊல்ம் குடியேற்றத்திட்டத்தைத் தாக்கி பல வெளையர்களைக் கொன்றனர்.
- 1895 - கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.
- 1915 - முதலாம் உலகப் போர்: ஒட்டோமான் பேரரசுப் படைகளுக்கெதிராகஆர்மீனியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1919 - ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆப்கானிஸ்தான் முழுமையான விடுதலை அடைந்தது.
- 1934 - ஜேர்மனியில் பியூரர் பதவியை ஏற்படுத்த நாட்டின் 89.9% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நட்பு நாடுகளின் உதவியுடன் பாரிஸ் தாக்குதலைத் தொடுத்தது.
- 1945 - ஹோ ஷி மின் தலைமையில் வியட் மின் படைகள் வியட்நாமின் ஹனோய் நகரைக் கைப்பற்றினர்.
- 1953 - பனிப்போர்: அமெரிக்காவின் சி.ஐ.ஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக் கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷாமுகமது ரேசா பாலர்வி தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.
- 1960 - சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும், 40 சுணடெலிகளையும், 2 எலிகளையும், பல வகைத் தாவரங்களையும் கொண்டு சென்றது.
- 1989 - போலந்தின் பிரதமராக சொலிடாறிற்றி தொழிற் சங்கவாதி டாடியூஸ் மசவியேஸ்கி அதிபர் ஜாருசெல்ஸ்கியினால் தெரிவுசெய்யப்பட்டார். 42 ஆண்டுகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் முதல் கம்யூனிஸ்ட் அல்லாத பிரதமர் இவரே ஆவார்.
- 1991 - ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் சோவியத் அதிபர் மிகைல் கர்பசோவ் கிறிமியா என்ற சுற்றுலா மையத்தில் ஓய்வெடுக்கும் போது கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

### பிறப்புகள்

- 1871 - ஓர்வில் ரைட், எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1948)
- 1918 - சங்கர் தயாள் சர்மா, இந்தியாவின் 9ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1999)
- 1929 - ச.அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (இ. 2008)
- 1931- ஜி. கே. மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவர் (இ.2001)
- 1946 - பில் கிளின்டன், ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது குடியரசுத் தலைவர்


### இறப்புகள்


- 1905 - வில்லியம்-அடோல்ஃப் பூகுவேரோ, பிரெஞ்சு ஓவியர் (பி. 1825)
- 1934 - ஃபெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (பி.1898)
- 1662 - இலாய்ச் பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"





...இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் சச்சின் தான் பங்குபெற்ற முதல் ரஞ்சி, துலீப் மற்றும் தியோதர் போட்டிகளிலேயே செஞ்சுரி அடித்து சாதனை செய்தான். இந்த சாதனையை இதுவரை வேறு யாரும் முறியடிக்கவில்லை.

1991 அக்டோபர் 17 ஆம் திகதி இந்தியா, பாகிஸ்தான், மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையேயான வில்ஸ் போட்டிகளில் கலந்துகொள்ள இந்திய அணி ஷார்ஜா சென்றது.

சச்சினின் பள்ளித் தோழன் வினோத் காம்ப்ளி முதன் முறையாக ஷார்ஜா போட்டிகளில் கலந்துகொள்ளத் தேர்வு செய்யப்பட்டார். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி துவங்கியது. மஞ்சுரேகர் 72 மற்றும் சச்சின் 40 பந்துகளில் 51 ரன்கள் எடுத்து இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தனர். இரு ஆட்டங்களிலும் மேற்கு இந்திய அணி இந்தியாவிடம் தோற்றது. ஆக, இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானும் இந்தியாவும் மோதின.



சச்சின் 49 ரன்கள் எடுத்தும் பயனின்றிப்போனது. பாகிஸ்தான் வெற்றி பெற்று வில்ஸ் கோப்பையை தட்டிச் சென்றது. பாகிஸ்தானின் ஜாவித் 37 ரன்களுக்கு 7 விக்கெட்டுக்கள் எடுத்தார். இதில் ஒரு ஹாட்ரிக் அடக்கம்.

ஒருநாள் போட்டிகளில் இது ஒரு சாதனையாகும். தனது மாணவர்களான சச்சின் மற்றும் காம்ப்ளி இருவரும் இந்தியாவிற்கு ஆடுவதில் குரு அச்ரேகருக்கு அளவற்ற மகிழ்ச்சி.

இனவெறி பிடித்த நாடாகத் திகழ்ந்த தென் ஆபிரிக்கா வெள்ளைக்கார நாடுகளான இங்கிலாந்து, ஆஸ்திரிரேலியா, நியூசிலாந்து ஆகியோருடன் மட்டுமே ஆடி வந்தது.

மேலும கருப்பு இனத் தலைவரான நெல்சன் மண்டேலாவை சிறையில் அடைத்த காரணத்தினால் ஆசிய கிரிக்கெட் நாடுகள் சர்வதேசப் போட்டிகளில் தென் ஆப்ரிக்கா பங்குகொள்வதை எதிர்த்தன.

எனவே, 1970 முதற்கொண்டு சர்வதேச போர்ட்டிகளில் தென் ஆபிரிக்கா பங்கேற்கவில்லை. ஆனால், தொண்ணூறுகளின் இறுதியில் நெல்சன் மண்டேலா விடுதலை பெற்றதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ள தென் ஆபிரிக்காவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

> ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல்நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17தான். சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம்!

### உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்!

இதனைத் தொடர்ந்து தென் ஆபிரிக்கா கிரிக்கெட் அணி இந்தியாவில் ஒருநாள் போட்டிகளில் விளையாட ஒப்புக்கொண்டது.

10 நவம்பர் 1991 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் ஈடன் மைதானத்தில் 90,000 ரசிகர்கள் முன்னிலையில் இந்திய- தென் ஆபிரிக்கா அணிகளின் போட்டி துவங்கியது.

சாதாரணமாக கிரிக்கெட் ஆடும் வெளிநாடுகளில் ரசிகர்கள் கூட்டம் அவ்வளவாக இருக்காது.

எனவே, கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரசிகர்கள் கூடிய பிரம்மாண்டக் கூட்டத்தைக் கண்டு தென் ஆபிரிக்க வீரர்கள் அசந்து போய்விட்டனர். இந்தப் போட்டியில் அச்ரேகரின் மற்றொரு மாணவன் பிரவீண் ஆம்ரே அறிமுகமானான்.

தென் ஆபிரிக்கா 8 விக்கெட்டுக்களுக்கு 177 ரன்கள் மட்டுமா எடுத்திருந்தது. மிகச் சுலபமாக ஜெயிக்க வேண்டிய இந்தப் போட்டியில் இந்தியா போராடி வென்றது. அடுத்த ஒரு நாள் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றது. டில்லியில் நடைபெற்ற மூன்றாவது மற்றும் கடைசி போட்டியில் தென் ஆபிரிக்கா வென்றது. இருப்பினும் 2:1 என்ற கணக்கில் இந்தியா தொடரை வென்றது.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 05 இன் பலன்கள்



### தோற்றம்

**70**

செவ்வாயுடன் புதன் சேர்ந்து தரும் ஆதிக்கம் இது. உயரமானவரே. சிவப்பாக இருப்பர். கண்கள் பெரிதாக தாமரை இதழ்போல இருக்கும். உடலில் உறுதியிருக்கும். நல்ல சுறுசுறுப்பாக இருப்பார். நீண்ட முகத்தில் நீண்ட மூக்கு இருக்கும். பெரிய வாய் இருக்கும். கை, கால்கள் நீளமாக இருக்கும். வரிசையான பற்கள் இருக்கும். கவர்ச்சியாக இருப்பர்.

### குணம்

உடலிலும் உறுதி; மனத்திலும் திடம் இருக்கும். துணிச்சலும் சுறுசுறுப்பும் உண்டு. விளையாட்டில் திறமை வரும். யாராயிருந்தாலும் எதிர்த்துப் போராடுவர். மரியாதையோடு வாழவிரும்புவர். பார்த்தால்சாதுபோலத் தோன்றுவர். வாழ்க்கையிலும் எது வந்தாலும் எதிர்த்துப் போராடி வெல்லுவர்.

அறிவு உண்டாகிவிடும். இளமையும் சுறுசுறுப்பும் இறுதிவரை இருக்கும். பிறர் துன்பத்தை ரசிக்கவும் செய்வார். இது சுபாவம். ஆனால், இவர்கள்கெட்டவரில்லை. பொய், அயோக்கியத்தனம் செய்ய மாட்டார். சாத்திர சம்பிரதாயமெல்லாம் மதிப்பார். நூல்கள் நிறைய படிப்பார். தானே நுண்ணறிவை முயற்சியால் அடைவார். தனியாக இருக்கப் பிரியப்பட்டாலும் நண்பர் நிறைய இவருடன் சேருவர். அரட்டையடிப்பதில் நேரம் அதிகம் செலவிடுவார். தூண்டுகோல் இருந்தால் நிறைய வேலைகளைச் சாதித்து முடிப்பார்.

தம்மைப்போல பிறரும் வேகமாகச் செயல் புரிய நினைத்து விரட்டுவார். சோர்வடையாமல் மீண்டும் மீண்டும் முயற்சிப்பார். படம் வரைய வரும். எல்லோரும் தம்மைப்போலவே கட்டுப்பட்டு நீதி நியாயப்படி வாழ விரும்புவார். நிறையக் கண்காட்சி காணுவர். தேவையில்லாமல் எதையாவது எப்போதும் செய்து கொண்டிருப்பார். சோம்பியிரார். சுயநலம் இருக்கும். பொதுக் காரியத்திலும்கூட ஈடுபடுவார். புதிய புதிய ஆடை, பொருட்கள், உணவு வகை மேல் விருப்பப்படுவர். பயணம் அதிகம் போக ஆசைப்படுவார். விநோதக் கதைகளை விரும்புவார். எதிலும் புதுமையையே ரசிக்க இவருக்குப் பிடிக்கும். ஓவியம் கணினி, விஞ்ஞானம், கணக்கு வரும். எத்துறையிலும் பொறியியல் பாடம் பயிலலாம். கராத்தே, ஜூடோ போன்ற தற்காப்புக் கலை பயிலலாம். யோகாசனம் போடலாம். இல்லையெனில் கிரிக்கெட் புட்பால் போன்ற விளையாட்டைப் பயிலலாம். இல்லாவிடில் நரம்புத் தளர்ச்சி ஏற்படும். எதையும் புதுமையாகச் செய்ய, பேச ஆற்றல் வரும். இவர்கள் நல்லது, கெட்டது இரண்டையும் அறிந்திருப்பர். புத்திசா[illegible] மானாலும் இருப்பர்.

### குடும்பம்

பெரிய குடும்பத்தில் பிறந்து செல்வாக்குடன் வளருவர். சகோதரிகளுடன் சகோதரர்களுடன் வம்படிப்பர். சச்சரவிடுவர். இரைந்து சண்டை எல்லோருடனும் போடுவர். காதல் விவகாரம் உண்டு. அழகுணர்வுள்ள இவர் கண்டவுடன் காதல் வயப்படுவர். எவரெதிர்ப்பும் இவர் சங்கதியில் எடுபடாது. இவர் இஷ்டப்படியே நடப்பர். இவரால் பிறந்த வீட்டில் கலவரம் மூளும். திருமணமான பிறகும் இவர் தம் இச்சைப்படியே நடந்து சச்சரவுக்குள்ளாவர். இதனால் குடும்ப வாழ்க்கை அச்சமூட்டுவதாகும். அடுத்தடுத்து வரிசையாகத் திகைக்க வைக்கும் நிகழ்ச்சிகள் இவர் குடும்பத்தில் நடக்கும். காரணம் இவருக்குப் பயங்கரத்தை ரசிக்கும் தன்மை உண்டு என்பதுதான். சத்தம் சண்டை இல்லாத வீட்டில் இவர்களுக்கு உறக்கமே வராது. விபத்து, அடி, காயம் என ஏதாவது நடக்கும். விரோதிகளும் ஏற்படுவர். இவர்கள் எது வந்தாலும் கவலைப்பட மாட்டார். அமையும் மனைவி இவரை வாட்டி எடுத்து விடுவாள். அவளை வம்பு செய்யத் தூண்டுபவரே இவராக இருப்பர். சண்டையை மூட்டி விட்டு இவர் ஆனந்தமாக அந்தச் சத்தத்திலேயே தூங்கிப் போய்விடுவர். மண வாழ்க்கையில் அமைதியிராது. அதனால் நீட்டிக்காது. பெண் வாரிசே உண்டாகும். சிலருக்கு வாரிசு இருக்காது. பொருளாதாரத் தட்டுப்பாடு வராது.

### தொழில்

இவர்கள் நல்ல கல்வி கற்றவராவர். பட்டங்கள் பெறுவர். அரசாங்கம், தனியார் கம்பெனிகளில் பெரும் அதிகாரிகளாக இருப்பர். இன்ஜினியரிங் படிப்பர். ஓவியக் கலையில் தேர்ச்சி பெறமுடியும். கம்யூட்டர், கணிதம், பிற விஞ்ஞானம் நன்கு படிக்கலாம். நிலவியல் ஆய்வாளராகலாம். ரியல் எஸ்டேட் பெரிய அளவில் செய்ய முடியும். அரசியலிலும் கௌரவமான இடம் கிட்டும். மின்சாரம், மின்னணு தொடர்பான தொழிலும் அமையலாம். எண்ணெய் எரிபொருள் நிறுவன அதிகாரிகளாக வரலாம்.அயல்நாட்டுத் தூதரகலாம். கல்லூரிப் பேராசிரியராகலாம். மனோதத்துவ சாத்திர நிபுணராகலாம். தொழிற்சாலைகளில் பெரிய அதிகாரியாகலாம். ட்ராவல்ஸ் நடத்தி.உயரலாம். மற்றும் பொலிஸ், இராணுவம்தீயணைப்புப் படை அதிகாரியாகலாம். சி.ஐ.டி அதிகாரியாக முடியும். நீதிபதிகளாகவும் வரலாம். சிறந்த விளையாட்டு வீரராகலாம். சினிமாவிலும் நடிப்பு முதலிய கலை சார்ந்த தொழில்களைச் செய்து வாழ முடியும்.

### நோய்

வெப்ப மிகுதியால் வயிற்று வலி ஏற்படும். குடல் குறை ஏற்பட்டு அறுவை சிகிச்சை நடக்கும். நரம்புத் தளர்ச்சி இருக்கும். வக்கிர எண்ணம் சபலப்படுத்தும். பி.பி. உண்டாகும். கட்டிகள், காய்ச்சல், பித்த வாந்தி உண்டாகும். ரத்தத்தில் நஞ்சு சேரும். அதனால் தோல் பாதிக்கப்படும். வாத வலிகள் கால் மூட்டுக்களை வருத்தும். முதுகும் கழுத்தும் வலிக்கும். உடற்பயிற்சி ஆசனம் செய்தால் பல கோளாறுகள் உண்டாகாது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழில்; சர்வதேசதரத்தில் ஆய்வுகூடம் அமைப்பு

## இலங்கையில் அமையும் என்கிறார் அமைச்சர் சுசில்

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக சர்வதேச தரத்திலான ஆய்வு கூடமொன்றை அமைக்கவுள்ளதாக சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இலங்கை தங்க நகை வர்த்தகர்கள் சங்கத்தின் வருடாந்த மாநாடு கொழும்பு சினமன் கிராண்டு ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொ ண்டார். இம்மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் அமைச்சர் சுசில பிரேம ஜயந்த தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கையில் நகை வர்த்தக தொழிலுக்கு 150 வருடங்களுக்கும் மேற்பட்ட வரீலாறுள்ளது. இருப்பினும் நாட்டில் 30 வருடங்கள் நீடித்த பயங்கரவாதம் இத்துறையையும் பாதிக்கவே செய்தது. என்றாலும் 2009இல் பயங்கரவாதம் முடிவுக்குக் கொணடு வரப்பட்டதோடு இந்நாட்டில் வாழுகின்ற சகல மக்களுக்கும் அமைதி, சமாதானம் கிடைக்கப் பெற்றது. எல்லோரும் ஒரே தேசத்தவராக வாழ்கிறோம். அச்சம், பீதியின்றி சுதந்திரமான முறையில் நாம் அன்றாட செயற்பாடுகளிலும், வியாபார நடவடிக்கைளிலும் ஈடுபடுகின்றோம்.

2005 ஆம் ஆண்டில் இந்நாட்டினரின் தனிநபர் வருமானம் 890 அமெரிக்க டொலர்களாகவே காணப்பட்டது. அது இன்று 3ஆயிரத்து 320 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. இவ்வருட இறுதிக்குள் 4ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என்ற எமது தனிநபர் வருமான இலக்கை அடைய முடியும் என நாம் எதிர்பார்த்துள்ளோம். 2009 ஆம் ஆண்டில் நாட்டிற்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் உல்லாசப் பயணிகளே வருகை தந்திருந்தனர். அந்த எண்ணிக்கை இன்று பத்து இலட்சத்தையும் தாண்டிவிட்டது. என்றாலும் இவ்வருட இறுதியாகும் போது 1.5 மில்லியன் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்திருப்பர் என நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை இத்தொழிற்றுறையை மேம்படுத்துவதற்காகப் பல நடவடிகைகளை முன்னெடுத்துள்ளோம். அந்த வகையில் பொற்றொழிலாளரகளை வரவழைப்பதற்கான விசா நடைமுறைகளை இலகுபடுத்தியுள்ளோம். ஆபரண ஏற்றுமதி மூலம் 700-800 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்நாடு வருமானமாகப் பெற்றுக் கொள்கின்றது. இத்தொகை இவ்வருட முடிவில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுமென எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சிகிச்சை பெறவும் தே.அ.அ.தேவை

இலங்கையில் அரச .வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதாயின் இனி தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கவேண்டியது கட்டாயமாக்கப்படவுள்ளது.

சார்க் பிராந்திய வலய நாடுகளில் வாழும் மக்களின் ஒரே விதமான தோற்றத்தைக் கொண்டுள்ளமையால் இலங்கை வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றதுடன் வைத்தியசாலை நலன்களை சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே வெளிநபர்கள் உள்நாட்டு மருத்துவ சேவையின் நன்மைகள் அனுபவிப்பதனை தடுக்கும் நோக்கில் எதிர்காலத்தில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அனைவரும் தங்களது தேசிய அடையாள அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# சீனாவை கண்காணிக்கவே கொழும்பில் இந்திய கப்டன்

சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள நெருங்கிய உறவைக் கண்காணிப்பதற்காகவே கொழும்பிலுள்ள தனது தூதரகத்தில் பிரதி பாதுகாப்பு ஆலோசகராக படைத்தரப்பைச் சேர்ந்த கேணல் குரிந்தர் எஸ்.கிளேயரை இந்தியா நியமித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த நியமனத்தை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஸ் கோபாலன் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆயினும், இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு அலகு விரிவாக்கபபட்டமைக்கான காரணம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு இது தொடர்பில் பதில் அளிப்பதற்கு முன்னர் இதுபற்றி வெளியான செய்தியின் உள்ளடக்கத்தை தான் பார்க்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாதுகாப்பு அலகை விரிவாக்குவது உள்ளக விவகாரம் என்றும், தமது பிரிவை விரிவாக்க வேண்டியிருந்தால், அதனைச் செய்ய முடியும் என்றும் மற்றொரு இந்தியத் தூதரக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதரகத்தில் முதன்முறையாக பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்த பின்னணியில் இந்தியாவும் தனது தூதரகத்தில் கேணல் குரிந்தர் எஸ்.கிளேயரை பிரதி பாதுகாப்பு ஆலோசகராக நியமித்துள்ளது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### சாகித்திய நிருத்திய வாத்திய பிருந்தா

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப் பிரிவு வழங்கவுள்ள மிருதங்க வித்துவான் துரைராஜாவின் நெறியாள்கையின் உருவாக்கம் பெற்ற சாகித்திய நிருத்திய வாத்திய பிருந்தா நிகழ்ச்சி இன்று இரவு 7.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெறவுள்ளது.

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் எஸ்.சிவஞானசேகரம், வயலின் ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம் எஸ். துரைராஜா, மோர்சிங் செ.நந்தகுமார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் செயலின் இரகசியம் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீக கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வாக புத்தூர் சோமஸ்கந்தா மாணவர்களின் குழு நடனம், குழு இசை என்பன இடம்பெறவுள்ளன.

### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் வாலி மோட்சம் எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

### இசை நிகழ்ச்சி


நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் விஜய குமாரசர்மா வத்சாங்கித சர்மா வழங்கவுள்ள மதுரகானம் இடம்பெறவுள்ளது.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் வழங்கவுள்ள உய்வற்கு வழிகாட்டும் சைவத் தமிழ் கலாசாரம் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் அளவெட்டி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, வட்டுக்கோட்டை துணைவி அறநெறிப் பாடசாலை, நயினாதீவு அமுத சுரபி அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை அண்ணாமார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ள கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# நல்லூரான் திருவடிக்கு இன்று பத்தொன்பதாம் திருவிழா



## நல்லூர் கந்தன் கருணை...



யாழ். நாகரிலே கோவில் கொண்ட கந்தனே
யாழ் இசைத்து உன்னை வணங்க வரும்
பாமர மக்களின் துன்பங்களை நீக்குவதற்காக
பழனி ஆண்டவர் எனும் பெயரினை பெற்றவனே..
உன்னையே நம்பி உன் கருணையே
எம் வாழ்க்கை என எண்ணி உன்னை
நாடும் அடியார்களுக்கு உன்கரம்
கொடுத்து உன்அருளை பொழிவாய் கந்தனே...

**சே.லக்ஷிகா(யா/உரு.சை.த.வி)**

## வேலவன் மயிலென ஆடு



வாடி தோழி வந்தென்செவியில்
வள்ளி மணாளனைப் பாடு
நாடியே பக்தர்கள் நாளும் போற்றும்
நல்லைக் குமரனைப் பாடு
முல்லைக்கொடி போல் மெல்ல அசைந்து
மெல்லிடை நெளிய நீ ஆடு
வல்லசுரர் தன்னை அமரில் வென்ற
வேலவன் மயிலென ஆடு!

**ஆனந்தன்(வண்ணார்பண்ணை)**

## அருள் பொழியும் ஐயனே முருகா!



நல்லைப் பதியமர்ந்து நல்லருள் புரிபவனே
நண்ணினார் துயர் துடைத்து காத்து நிற்பவனே
வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்குபவனே
வினை தீர்த்து விடிவைக் கொடுத்திடு ஐயனே முருகா
தொல்லை தரும் வாழ்வின் சுமையை நீக்குமையா
தொடராக தொடர்ந்து வரும் துன்பந்தான் ஏன் ஐயா
வல்வினை போக்கும் வடிவேலழகா முருகோனே
வரம் ஈந்து எமைப்பார்த்து இரங்குவாய் ஐயா

**புங்கையூர்த்தேவி(நல்லூர்)**

## எம்மைக் காத்தருள்வாய்



நலிவுற்ற நம் தமிழினத்தின்
துன்பம் தீர்க்கவே
நல்லை நகர் வீதியில்
நாளும் எழுந்தருளும்
நல்லை நகர் கந்தா
உன் நாமம் ஓதிடவே
நம் துன்பமெல்லாம் ஒளிகண்ட
இருள்போல் போக்கிடுவாய்
குன்றத்தில் குடியிருக்கும் குமரா
குவலயத்தில் குடிகொண்ட தீமைகளை களைநது
குதூகலம் பொங்கிடவே வரந் தந்து
குடிமக்களாம் எம்மை காத்தருவாய்

**பொன்.தில்லைநாதன் (பூநகரி)**

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

அறிவோடு ஞானம் ஆக்கமுறுசெல்வங்கள்
செறிவாகத் தோன்றிச் சிறக்குமே-அறிந்திடுக!
நல்லைக் குமரன்பதம் நம்பியவர்யாவர்க்கும்
இல்லையென மாட்டான் இவன்

**கலாபூஷணம் சந்தக் கவிஞர்**
**நவ.பாலகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனப்படுகொலைகள் குறித்து விசாரணை!

## ஐ.நா.ஆணையாளர் நவிப்பிள்ளையிடம் வடக்கு, கிழக்கு மாகாண உறுப்பினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இனப்படு கொலைகள் இடம்பெற்றனவா என்ற கோணத்தில் விசாரணை களை முன்னெடுக்குமாறு வடகிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

33 உறுப்பினர்கள் கூட்டாக கையெழுத்திட்டு இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

அதேவேளை விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஐ.நாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில், இதனை விடவும் விரிவான வகையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரகள், ஐக்கிய நாடுகள மனிதவுரிமைப் பேரவையின் தற்போதைய ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட சகல விதமான ஒடுக்குமுறைகள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென 33 மாகாணசபை உறுப்பினர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதில் யுத்தம் இடம்பெற்ற காலம் மட்டுமன்றி அதற்கு முன்னைய காலங்களில் இடம்பெற்ற அடக்குமுறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு விசாரணை செய்வதன் மூலம் தமிழ் மக்கள் இனச் சுத்திகரிப்பிற்கு உட்பட்டார்களா இல்லையா என்பதனை அறிந்து கொள்ள முடியும் என சுட்டிக் காட்டியுள்ளனர்.

கோயில்கள் இடிக்கப்பட்டமை, யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை, தேவாலயங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் என பல் வேறு வழிகளில் தமிழ் மக்கள் துன்பங்களை அனுபவிக்க நேரிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருவதாகவும் மாகாணசபை உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையிடம் சுட்டிக் காட்டியுள்ளனர். (6)

## பாதயாத்திரை பயணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தனின் இரதோற்சவத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் இடம்பெறும் நயினை-நல்லூர் 50 ஆம் ஆண்டு திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்.

அபிஷேக பூசை வழிபாட்டின் பின் வேல் பூசையுடன் வேல் எடுத்து திருத்தலப்பஜனைப் பாதயாத்திரை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பரணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக சென்று எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நல்லூர் தேர்த் திருவிழா அன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தை வந்தடையும். (6)

# நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் இயற்கையாக அதிகரிக்க முடியும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**மனஅழுத்தம் தவிர்த்துவிடலாம**

மன அழுத்தத்துக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மன அழுத்தம் அதிகரிக்கும்போது அது நோய் எதிர் ப்பு மண்டலத்தைப் பாதித்து, நோய் எதிர்ப்பு சக்தியை கீழ் நோக்கிக் கொண்டு செல்லும். எனவே, மன அழுத்தத்தைத் தவிர்க்கக்கூடிய வழிமுறைகளைக் கற்று, அதைப் பின்பற்றுங்கள். நேரத்தைத் திட்டமிட்டு, திட்டமிட்ட நேரத்தில் வேலையை முடிப்பதன் மூலம் மன அழுத்தத்தைக குறைக்கலாம்.

**ஊட்டச் சத்துக்கள்**

பலருக்கு விற்றமின் டி குறைபாடு, நோய் எதிர்ப்பு சக்தியை பாதிக்கும் என்ற உண்மை தெரிவதில்லை. நம் ஊரில்தான் விற்றமின் டி குறைபாடு அதிகம் உள்ளவர்களும் உள்ளனர். எனவே,





ஒரு நாளைக்குத் தேவையான அளவு விற்றமின டி-யை சூரியன் மற்றும் உணவில் இருந்து பெறுகிறோமா என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும். விற்ற ின் டி குறைபாடு உள்ளவர்கள் மருத்துவரை அணுகி, அவர் பரிந்துரையின்பேரில் சத்து மாத்திரையை எடுத்துக்கொள்ளலாம்.


இதேபோல துத்தநாகம (ஸிங்க) புற்றுநோய் செல்லைக்கூட எதிர்த்து போராடும் ஆற்றலை அளிக்கக்கூடியது. நாள் ஒன்றுக்கு 12 மி.கி. அளவுக்கு துத்தநாகம் தேவை. இதை முந்திரி, தயிர், நண்டு, இறைச்சி போன்ற உண வில் இருந்து பெற முடியும். துத்த நாகம் ஊட்டச்சத்து மாத்திரை எடுத்துக்கொள்பவர்கள், ஒரு நாளைக்கு 15 மி.கி.க்கு குறைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். துத்தநாகம் அதிகமானாலும், ஏனைய ஊட்டச்சத்து மற்றும் தாது உப்புக்களை உடல் கிரகிப்பதில் குறைபாடு ஏற்படும்.

எண்ணெய் சத்து நிறைந்த மீன் வகைகளில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் நிறைவாக உள்ளது. இது நமது நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. எனவே, கெட்ட கொழுப்பு நிறைந்த "ரெட் மீட்' உணவுகளுக்குப் பதில் இந்த மீனைச் சாப்பிடலாம். மீன் சாப்பிடப் பிடிக்காதவர்கள், சைவம் மட்டுமே சாப்பிடுபவர்கள் மீன் எண்ணெய் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம்.

**கை சுத்தம் தருமே சுகாதாரம்**

நோய் எதிர்ப்பு சக்தி மேம்பட



பொது சுகாதாரம் மிக முக்கியம். உணவைச் சமைப்பதற்கு முன்பும் சாப்பிடுவதற்கு முன்பும் பலர் கை கழுவுவது இல்லை. கை கழுவுவதில் நுணுக்கமே உள்ளது. சமைப்பதற்கு முன்பு, சமைத்த பின், உணவுப் பொருளைத் தொடுவதற்கு முன்பு, தொட்ட பிறகு, கழிப்பறைக்கு சென்று வந்த பிறகு கை கழுவுவது மிகவும் அவசியம். வெறும் தண்ணீர் ஊற்றி கழுவாமல், சோப் அல்லது பிரத்தியேக கை கழுவும் திரவத்தைப் பயன்படுத்தி கையின் மேல பகுதி, அடிப்பகுதி, நகங்கள், விரல இடுக்குகள் என கையின் அனைத்துப் பகுதிகளையும் தேய்த்து சுத்தமாகக் கழுவ வேண்டும். "க்ளென்சிங் ஏஜன்ட்' கொண்டு மேலே சொன்ன முறைப்படி கழுவினாலே, 90 சதவிகிதக் கிருமிகள் நம்மை அண்ட விடாமல் விரட்டி விடலாம.

**வெள்ளைப் பூண்டும் வெங்காயமும்**

எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு வெள்ளைப்பூண்டு நல்லதோர் மருந்து. நோய்க் கிருமிகளை எதிர்த்து போராடும் தன்மை பூண்டுக்கு உண்டு. பக்றீரியாவுக்கு எதிராக செய லாற்றும் தன்மை பூண்டுக்கு உள்ளது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. பூண்டு மற்றும் வெங்காயத்தை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு புற்றுநோய்க்கான வாய்ப்பு குறைவாக உள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. கொழுப்பைக் குறைக்கும் சக்தி வெள்ளைப் பூண்டில் இருப்பதால் கொழுப்புச் சத்து அதிகமுள்ளவர்கள் அதை எடுத்துக் கொள்ளலாம். மேலும், இதில "ஆன்டி ஆக்சிடன்ட்' இருப்பதால் உடலுக்கு கூடுதல் நலம்.

**தண்ணீர் அவசியம்**

உயிர் வாழ்வதற்குத் தண்ணீர எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு உடலின் எதிர்ப்பு சக்திக்கும் தண்ணீர் மிக அவசியம். போதுமான அளவு தண்ணீர் அருந்தவில்லை என்றால் உடலில் நீர் ச்சத்துக் குறைந்து உடல் நலம் கெட வாய்ப்புள்ளது.

எனவே சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்றரை லீற்றர் வரை தண் ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விசாரணைக் குழு இந்தியாவை இக்கட்டில் நிறுத்துமா?

அண்மைய நாட்களாக உலாவி வந்த ஒரு வதந்திக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.



இலங்கையில் போரின்போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்குழுவுக்கு இந்தியாவோ, தாய்லாந்தோ வீசா வழங்க மறுக்கவில்லை என்று அவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

சில வாரங்களாக இந்த விவகாரம் ஊடகங்களில் பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்டு வந்தது. ஏனென்றால், இந்த விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக கூறிவிட்டது.

இத்தகைய நிலையில் இலங்கைக்கு வெளியில் இருந்தே விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை ஐ.நா விசாரணைக் குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த விசாரணையின் முக்கிய பங்கு, சாட்சியங்களைத் திரட்டுவதாகும்.

அதனை இலங்கைக்குள் இருந்து மேற்கொள்ள முடியாது போனால் அயல்நாடுகளில் இருந்து மேற்கொள்வதே சுலபமானது.

இந்த விசாரணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பாகிஸ்தானிய மனித உரிமை ஆர்வலர் அஸ்மா ஜகாங்கீர், சில வாரங்களுக்கு முன்னர் அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு விசாரணைக்கு அனுமதி மறுக்கப்படுவது ஒன்றும் தமக்குப் புதிய விடயம் அல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே இதுபோன்ற சூழ்நிலைகளில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதைச் சுட்டிக்காட்டி, தேவைப்பட்டால் சாட்சியங்களை அயல்நாடுகளுக்கு அழைத்து விசாரிப்போம், சிலவேளைகளில் ஜெனிவாவுக்கு வரவழைப்போம் என்றும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இருந்து சாட்சிகளை ஜெனிவாவுக்கு அழைத்து சாட்சியங்களைப் பெறுவது ஒன்றும் அவ்வளவு இலகுவான காரியமல்ல. அதற்கு பெரும் செலவு ஏற்படும்.

எனவே, அயல்நாடுகளுக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் இருப்பதாக பரவலாக நம்பப் பட்டது.

குறிப்பாக இந்தியாவில் அதற்கு வாய்ப்புகள் அதிகம் என்று கருதப் பட்டது. காரணம் போரில் இருந்து தப்பியவர்கள் பலர் இந்தியாவில் கூட தங்கியுள்ளனர்.

எனவே, ஐ.நா. விசாரணைக்குழு இந்தியாவில் இருந்து விசாரணையை மேற்கொள்ளும் சாட்சியங்களைத் திரட்டும் என்ற பரவலான நம்பிக்கை காணப்பட்டது.

இத்தகைய கட்டத்தில்தான் இந்தியாவும் ஏனைய தெற்காசிய நாடுகளும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா விசாரணைக் குழுவுக்கு வீசா வழங்க மறுத்து விட்டதான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின.

இந்தப் புரளியை முதலில் கிளப்பிவிட்டது இலங்கை அரசாங்கம் தான்.

தெற்காசிய நாடுகள் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு வீசா வழங்க மறுத்தமை இலங்கைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும், மனித உரிமை ஆணைக் குழு உறுப்பினர் ஒருவர் கூறியிருந்தார்.

இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழு எவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த ஒரு விடயமே வெளிப்படுத்தி நிற்கிறது.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களில் பரப்பப்பட்ட இந்தச் செய்திக்கு ஒரு அடிப்படை நோக்கம் இருந்துள்ளது என்பது தெளிவாகவே தெரிகிறது.

அதாவது இந்தியா வீசா வழங்கவில்லை என்று முன்னரே கூறியதன் மூலம் இந்தியாவுக்கு இக்கட்டான சூழலை ஏற்படுத்த முனைந்திருக்கிறது அரசாங்கம்.

இதனையும் மீறி வீசா வழங்கப்பட்டால் எதற்காக வழங்கப்பட்டது என்ற கேள்வி புதுடில்லியை நோக்கி எழுப்பப்படும்.

சாதாரணமாக ஐ.நா. விசாரணைக் குழு வீசா எடுத்துக் கொண்டு இந்தியா சென்றிருந்தால் அது சர்ச்சையாக உருவெடுக்காது.

இப்படியான செய்தி வெளியான நிலையில் ஐ.நா. குழுவுக்கு இந்தியா வீசா வழங்கினால் அது கேள்விகளை எழுப்பும். அதனால் இந்தியா வீசா வழங்கப் பின்னடிக்கும்; அல்லது வழங்காமல் போகலாம். அவ்வாறு இந்தியா எந்த நகர்வை மேற்கொண்டாலும் அது இலங்கைக்கு சாதகமான விடயமாகும்.

எனவேதான் புதுடில்லியை இக்கட்டில் மாட்டி விடுவதற்காக திட்டமிட்டுக் காயை நகர்த்தியது கொழும்பு.

இதனால்தான் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீனிடம் இதுபற்றி ஒவ்வொரு முறை வினவப்பட்ட போதும் சரியாகப் பதிலளிக்காமல் நழுவினார்.

ஒருபோதும் அவர் ஐ.நா விசாரணைக்குழு வீசாவுக்கு விண்ணப்பிக்கவும் இல்லை, நாம் மறுக்கவுமில்லை என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதிலளித்திருக்கவில்லை.

அவ்வாறு அவர் கூறியிருந்தால் இந்த விவகாரம் இந்தளவுக்கு நீண்டிருக்காது.

இந்திய ஊடகங்களில் இந்தச் செய்தி வெளியாகாத நிலையில் அதுபற்றித் தம்மால் கருத்து வெளியிட முடியாது என்று தொடங்கி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வெளிப்படுத்திய நிலைப்பாடு என்ன என்று விபரித்து ஐ.நா. குழு வீசாவுக்கு விண்ணப்பித்தால் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு முடிவெடுக்கப்படும் என்று பூடகமாக குறிப்பிட்டிருந்தார் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன்.

அதாவது, வெளிப்படையாக பதிலை அளிக்காமல் அவர் நீட்டி முழக்கியது இந்தியாவும் எதையோ வெளிப்படுத்தத் தயங்குகிறது என்ற உண்மையை புலப்படுத்தியிருந்தது.

உண்மையில் இந்தியாகூட இந்த விவகாரத்தில் ஒரு மயக்க நிலை நீடிப்பதையே விரும்பியது காணலாம்.

ஆனால், இப்போது நவநீதம்பிள்ளை இந்த கேள்விகளுக்கு முடிவு கட்டியிருக்கிறார்.

அதாவது, ஐ.நா நிபுணர் குழுவினர் எந்தவொரு நாட்டுக்கும் செல்வதற்கு வீசா கோரி விண்ணப்பிக்கவில்லை என்று அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இத்தகைய நிலையில் இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தில் குழப்பத்தை விளைவிக்க முயன்றிருப்பதும், இந்திய அரசாங்கம் அதனைத் தொடர விரும்பியிருப்பதும் வெளிப்படையாகியிருக்கிறது.

இந்தியாவின் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள கருத்துக்கள் ஐ.நா விசாரணைக் குழுவை அது வரவேற்காது என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கின்ற நிலையில் ஐ.நா குழு இந்தியாவிடம் வீசா கோரும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கை வெளியிலுள்ள ஆதாரங்களை ஒன்று திரட்டி போர்க் குற்றங்களை நிரூபிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறியிருக்கிறார் நவநீதம்பிள்ளை.

அதாவது, ஐ.நா விசாரணை என்பது குறித்து ஒரு நாட்டுக்குச் சென்றுதான் மேற்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை என்றும் அவ்வாறு அனுமதிக்கப்படாத சந்தர்ப்பங்களிலும்கூட வெற்றிகரமான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதை வடகொரியா, சிரியா விவகாரங்களை வைத்து உதாரணம் காட்டியிருக்கிறார் அவர்.

தற்போதுள்ள நவீன தொடர்பாடல் வசதிகளை ஐ.நா அதிகம் நம்புவதாகவும் தெரிகிறது.

நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்து இலங்கை அரசாங்கத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ள தென்பதால்தான் அவர் முன்கூட்டியே தீர்மானம் எடுத்துச் செயற்படுவதாகவும், பக்கசார்பாக செயற்படுவதாகவும் அரசாங்கம் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை ஐ.நா விசாரணைக் குழு இந்தியாவிடம் வீசாவுக்கு விண்ணப்பித்து அதற்கு அனுமதி மறுக்கப்பட்டால் இந்தியாவின் நடுநிலைமையும்கூட கேள்விக்குள்ளாக்கப்படும்.

ஏனென்றால் இலங்கைக்கு எதிரான விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது இந்தியா.

ஆனால், இஸ்ரேலுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு இந்தியா ஆதரவளித்தது.

எனவே, ஒரு விசாரணைக் குழுவை நியாயமானது என்று கூறி வாக்களித்த இந்தியாவினால் இன்னொரு விசாரணைக் குழுவை நியாயமற்றது என்று நாட்டுக்குள் அனுமதிக்க மறுப்பது சிக்கலானது.

அவ்வாறானதொரு சங்கட நிலை இந்தியாவுக்கு உருவாகுமா? இல்லையா? என்பது ஐ.நா விசாரணைக் குழுவின் அடுத்தகட்ட நகர்வுகளில்தான் தங்கியுள்ளது.

*-சுபத்ரா-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான திட்டங்களை வகுக்கும் போது மனிதாபிமானத்துடன் செயற்படுதல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களுக்கான திட்டங்களை வகுக்கும்போது மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். அதே வேளை தொகுதிகளில் வேலைத்திட்டங்களை அடையாளம் காண்பதிலும், அதற்கான மதிப்பீடுகளைச் செய்வதிலும் வெளிப்படைத் தன்மையும் நேர்மையும் பேணப்பட வேண்டும் என்று பாரம்பரிய கைதொழில்கள் மற்றும் சிறுதொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை தொகுதிகளுக்கு பங்கீடுசெய்வது தொடர்பாக கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், தொகுதி நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

15 பிரதேச சபை செயலாளர் பிரிவுகளையும் மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த நிர்வாகக் குழுவினர், அடுத்ததாக பிரதேச பொதுக்குழுவை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

தொகுதி நிர்வாகக் குழுவும், தொகுதி பொதுக் குழுவும் பொதுச் சபையும் செயற்திறன் மிக்கதாகவும் உறுதிமிக்கதாகவும் கட்டியெழுப்பப்பட்டு செயற்படும் போது தற்போதைய நமது பயணம் மேலும் முன் னோக்கிச் செல்லும்.

தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள இந்த நிர்வாகக் குழுவினர் நியமனம், எதிர்காலத்தில் தொகுதி குழுக்களின் தெரிவு முறையிலேயே இடம்பெறும்.

எனவே நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்கள் மக்களுக்கான திட்டங்களை பாரபட்சமற்றவகையிலும் நேர்மையாகவும் அரசியல் கடந்த மனிதாபிமானத்துடனும் செயற்படுத்த வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட நிதி, மற்றும் விசேட ஏற்பாடுகளுக்குள்ளாக அரசிடமிருந்து பெறப்படும் நிதிகள் என்பவற்றுக்கான வேலைத்திட்டங்களை வகுப்பதோடு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கவில்லை த.தே.கூ

## சுமந்திரன் எம்.பி.தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தனித்து வேட்பாளர் ஒருவரை நியமிப்பதா அல்லது கட்சியொன்றுக்கு ஆதரவளிப்பதா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.


கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகள் மற்றும் ஏனைய காரணிகளினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான ஆதரவு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இம்முறை பெரும்பான்மை பலத்தை சுலபமாக பெற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதல் சுற்று தேர்தலின் மூலம் இம்முறை ஜனாதிபதி யார் என்பதனை நிர்ணயிக்க முடியாமல் இரண்டாவது தடவையும் வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட வேண்டுமெனவும் 1978 இற்கு முன்னர் காணப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சி முறைமையை அமுல் செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (6)

# பரீட்சை நிலையம் செல்லாது மூவர் பரீட்சை எழுதியுள்ளனர்

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில், பரீட்சை மண்டபத்திற்கு செல்லாமல் பரீட்சார்த்திகள் மூவர் பரீட்சைக்கு தோற்றினர் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மாணவியொருவர் வைத்தியசாலையிலும் வெள்ளத்தினால் பரீட்சை மண்டபத்திற்கு செல்லமுடியாதிருந்த மாணவர் இருவர் சன சமூக நிலையத்திலும் பரீட்சைக்கு தோற்றினர்.

தம்புள்ளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தனி புன்சரணி என்ற மாணவியே தம்புள்ளை வைத்தியசாலையில் வைத்து பரீட்சை எழுதியுள்ளார்.

இதற்கு வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பன தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

இதேவேளை, பொகவந்தலாவை தெரங்கலையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இரண்டு மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்திற்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்ததாக பரீட்சை திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலக அதிகாரிகள் மூவர், டிங்கி வள்ளத்தின் மூலம் தெரங்கலைக்கு சென்று அங்குள்ள சனசமூக நிலையத்தில் வைத்து அவ்விரு பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை நடத்தியுள்ளனர். (6)

# மாணவிகளுடன் படகில் நாமல்!

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ, கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலை மாணவிகளுடன் பேற குளத்தில் படகு ஓட்டியுள்ளார். மியூசியஸ் கல்லூரியின் படகு ஓட்டும் அணியின் சில மாணவிகளுடன் இணைந்து அவர் படகு ஓட்டியுள்ளார். மாணவிகள், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, படகு ஓட்ட கற்றுக் கொடுத்துள்ளனர். நாமல் ராஜபக்ஷ மற்றும் பாடகர் இராஜ் வீரரத்ன றக்பி விளையாட்டு வளரச்சி வேலைத்திட்டம் தொடர் பில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரிக்கு சென்றிருந்த போது, அங்கு மாணவிகளை தம்முடன் நடனமாட அழைத்து பிரச்சினைக்குள் சிக்கினர். இந்த நிலையில், கொழும்பில் உள்ள மற்றுமொரு பிரபல பெண்கள் பாடசாலையான மியூசியஸ் கல்லூரி மாணவிகளுடன் நாமல் ராஜபக்ஷ படகு ஓட்டும் பயிற்சியை பெற்றுள்ளதானது மீண்டும் சாசசையை ஏற்படுத்தியுள்ளது.(6)

# இன்று ஒரு தகவல்

## அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்–புரியும்–என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டி ருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக் குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப் பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத் தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக் குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்– கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2–3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார்.

"வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள்கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதோணியில் கால்வைக்கும் இலங்கை அரசின் செயற்பாடு

இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டினை ஒரு வழிப்பாதை யில் மிகவும் சிறப்பாக முன்னெடுத்துச்செல்ல முடியும் எனும் தலைப்பில் சண்டே லீடரில் கலாநிதி ஜெகான் பெரேரா எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. –தமிழில் யோகர்–

(நேற்றைய தொடர்ச்சி)....

அரச ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில் விசாரணைக்கான அதன் விடயங்கள் சம்பந்தமாக தனது ஆலோசனைகளை அதற்கு வழங்கும் ஓர் ஆலோசனைச் சபையாகவே இந்த நிபுணர்கள் மூவரும் இயங்குவர். இதற்கும் மேலதிகமாக போரின்போது ஏற்பட்ட சிவிலியன் உயிரிழப்புகளுக்கான உண்மைக் காரணிகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் போன்ற பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கும் விதத்தில் கூடுதல் அதிகாரம் அளிக்கும் பொருட்டு காணாமற்போனோர் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவிற்கான ஆணை அதிகாரவரம்பினை அரசு மேலும் விஸ்தரித்தது.





அத்துடன் எந்தவொரு தனிமனிதனோ குழுவோ அல்லது அமைப்போதானும் சர்வ தேச மனிதாபிமான சட்ட அல்லது சர்வதேச மனித உரிமை சட்ட மீறல் அல்லது மீறல்களுக்கான நேரடி யான அல்லது நேரடியற்ற பொறுப்புக்களையும் கொண்டிருக்கிறார்களா என்பது குறித்தும் அவர்களே ஆலோசனை வழங்குவார்கள். இலங்கை இராணுவப் படைகள் என்ற மட்டில் ஆயுதம் தாங்கிய போராட்ட, போர் சட்டதிட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான விதி முறைகளின் கீழ் தெளிந்த பார்வை, இராணுவ தேவை மற்றும் விகிதாசார முறைகள் போன்றவை அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டனவா அல்லது தவிர்க்கப் பட்டனவா என்பதுடன் அரச சார்பற்ற ஒரு படைத்தரப்பு என்ற மட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கூட அதே சர்வதேச மனிதாபிமான சட்டவரையறைகளுக்குட்பட்ட விதமாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டார்களா? போன்ற விடயங்களும் அவர்களது விசாரணையில் அடங்கும்.

காணாமற் போனவர்களுக்கான விசாரணை ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே பொறுப்பளிக்கப்பட்டதும் கூடுதல் மட்டுப்படுத்தப்பட்டதுமான ஆணையதிகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளுடன் தற்போது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பரந்துபட்ட ஆணையதிகார பொறுப்புடன் கூடிய செயற்பாடுகளும் ஒத்திசைவாக முன்னெடுக்கப்படுமா என்பது கேள்விக்கிடமானதேயாகும். இந்த ஆணைக்குழுவானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட் டங்களை உள்ளடக்கிய பரந்துபட்ட அமர்வுகளை ஏற்கனவே நடத்தி 19 ஆயிரத்துக்கும் கூடுதலான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டுமுள்ளது. எப்படியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கியதன்மூலம் அவை தமது மனத்துயரங்கள் பற்றிய விடயங்களை குழுமுன் சமர்ப்பிக்கவிடாது தடுக்கும் அரச தரப்புக் கைங்கரியங்களும் இவற்றில் அடங்கும். மேற்படி குழுவின் அமர்வுகளில் சட்ட உதவி ஆணைக்குழுவினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவன தரப்பு அதிகாரிகளின் பிரசன்னமும் தடுக்கப்படுகிறது. ஆணையாளர்களுக்கும் ஆணைக்குழுவினருக்கும் ஒரே நேரத்தில் உதவி புரிபவர்களும் ஆலோசனை வழங்குபவர்களுமான செயலக AG பிரிவுகளைச் சேர்ந்த அரச பிரதிநிதிகளான அதிகாரிகள் காணாமற்போனோர் மட்டில் விளக்கமளிக்க அல்லது சிறையில் உள்ளவர்களை விசாரணைக்குழுவினர் முன் முன்னிலைப்படுத்துவது போன்ற சந்தர்ப்பங்களில் தமிழ்பேசும் அதிகாரிகள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் குறைபாடாகவோ இல்லாமலோ இருப்பது அனைவருக்கும் சிக்கலான விடயமாகவேயிருந்தது. எட்டு மாதங்களுக்கு முன்னரே புலன்விசாரணைக்கென குழுவொன்றினை நியமிப்பதுடன் விசாரணை வழிமுறைகள் பற்றி அறிவிப்பதாகவும் கூறப்பட்டவை மட்டில் எந்தவித அறிகுறியும் இருக்கவுமில்லை. ஐ.நா. விசேட விசாரணையாளர்கள் பலவந்தமாக காணாமற்போனோர் மட்டிலான விடயங்களை அணுகுவதற்கான எந்தவித ஏற்பாடுகளோ சாட்சிகளுக்கான சட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளோ எதுவுமிருக்க வில்லை.

## சந்தேகத்திற்கிடமான மதிப்பீடுகள்

உண்மையில் அது செயற்படவேண்டிய முறையில் சரியாக செயற்படவேண்டுமானால் அந்த மூவர் கொண்ட அந்த ஆலோசனைச் சபைக்கு மேலே கூறப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி சர்வதேச நியமங்களுக்கேற்ப அவை இருப்பதற்கான திருத்தங்கள் பற்றிய பரிந்துரைகளை வழங்கியிருக்கும்.



விசாரணைகள் சர்வதேச தராதரத்திற்கமைவாக இருப்பதை உறுதிசெய்து கொள்வதற்கு அவசியமான படிமுறைச் செயற்பாடுகளை முறைப்படி மேற்கொள்ள வழிகாட்டுவதே ஆணையாளர் களது பணியாகும். ஆலோசனைச் சபையை நியமிப்பதில் அரசாங்கமொன்றின் நோக்கத்தினை சந்தேகிக்கும் எவரும் கடந்த காலத்தில் நிகழ்ந்த மற்றுமொரு விசாரணைக்குழுச் செயற்பாட்டை மனதிற்கொண்டு பார்க்கலாம். இதுவே சுதந்திர விசாரணைக்கான சர்வதேச பிரபலஸ்தர் குழு (IIEGP) ஆகும். மிகவும் மோசமான மனிதவுரிமைகள் மட்டில் விசாரணை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு ஆலோசனைவழங்குவதற்கென 2007 இல் இது நியமிக்கப்பட்டது. பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட இந்த சுதந்திர விசாரணைக்கான சர்வதேச பிரபலஸ்தர் குழுவானது ஏற்கனவே நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையுடன் சர்வதேச விதிமுறைகளும் நியமதர நிலைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றமை மட்டில் உறுதியான அவதானம் செலுத்துவதற்காக அப்போது ஜனாதிபதியால் வரவழைக்கப்பட்டது. புலன் விசாரணைகளில் முன்னேற்றமில்லாத காரணத்தால் தனது நடவடிக்கைகளை ஒரு வருடத்தின் பின்னர் நிறுத்திக்கொண்டது இந்த சுதந்திர விசாரணைக்கான சர்வதேச பிரபலஸ்தர் குழு.

எதிர்காலத்திலும் ஆலோசனை சபைக்கான மேலதிக உறுப்பினர்களை மேலும் மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகார எல்லை மேற்கொண்டும் முரண்பாட்டு நிலைகளுக்கு வழிகோலும் சாத்தியமுமுண்டு. விசேடமாக விசாரணையின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்கு போரில் பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கலான பரந்த தேசிய ஆலோசனையின் அடிப்படையில் அது அமையவில்லையென்றால் அது சர்வதேச நியமங்களை மீறியதாகவே இருக்கும். வேறுபட்ட விதமான பின்னணியொன்றுடனும் அணுகுமுறையொன்றுடனும் கூடிய புதிய உறுப்பினர்கள் ஆலோசனைச் சபையில் உள்வாங்கப்படுவார்களேயாகில் அது சுதந்திர விசாரணைக்கான சர்வதேச பிரபலஸ்தர் குழு வகை சார்ந்த நிலைமையொன்றுக்கு வழிகோலுவதற்கான அழுத்தங்களையும் முரண்நிலைகளையும் உருவாக்குவதாகவேயிருக்கும். மொழியியல் திறனாற்றல்கள் மற்றும் சட்டநிபுணத்துவம் கொண்ட தகுதிவாய்ந்த பொருத்தமான அதிகாரிகளை நியமிக்க வேண்டியது அத்தியாவசிய செலவுமிக்கதோர் விடயமென்பதால் அதற்கேற்ப வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை உறுதியான முறையில் திட்டமிட்டுக்கொள்ளும் அவசியமும் இதில் உள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக இந்தத் தடவை தான் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் சமாந்தரமான ஐ.நா.விசாரணையொன்று இதுமட்டில் நடந்துகொண்டிருக்கும் தருணத்தில் அவற்றை மேலும் அதிகரிக்கும் என்பது அரசுக்குத் தெரிந்திருக்கும் என்பதில்சந்தேகமில்லை.

ஐ.நா.மனிதவுரிமைச் சபையினால் இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் சம்பந்தமாக இந்த வருடம் மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து அவைபற்றி ஆராய்வதற்கென நியமிக்கப் பட்ட ஐ.நா.வின் சுதந்திரமான விசாரணைக்கு முவே முன்னர் அரசு மறுத்திருந்த கடந்தகால மீறல் குற்றங்களுக்கான பொறுப்புடைமை பற்றி மீளவும் கருத்திற்கொண்டு செயற்படுவதற்கான நோக்கத்தை அதற்கு ஏற்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. உண்மையில் இது வரவேற்கப்படவேண்டிய முன்னேற்றகரமான முயற்சியொன்றேயாகும்.

தற்போது நாட்டிற்குள்ளேயே விடயங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கையாள்வதன்மூலம் சர்வதேச தரநிலைகளை எட்டமுடியாதிருக்கும் நிலையில் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு வேறுபட்ட விடயங்களை வெவ்வேறாகக் கையாள்வதன்மூலம் அதே தரநிலைகளை எட்ட முடியுமா என்பதையிட்டு அரசாங்கம் கருத்திற்கொள்வது அவசியமாகும்.

சிவில் சமூகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளுங்கூட ஒருவகையில் சர்வதேச நியமவிதிமுறைகளை மீறுகின்ற செயலேயாகும்.

இனங்களிடையேயான இணக்கப்பாட்டிற்குரிய வழிமுறைகள் வெவ்வேறான இரண்டு பாதைகளில் செல்லமுடியாதென்பதால் இது மோசமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் மேற்படி விடயங்கள் சம்பந்தமான தனது வழிமுறைகளனைத்தும் இனநல்லிணக்கப்பாட்டிற்கான சர்வதேச தர நிலை அடிப்படையிலானவை என இலங்கை அரசு உலகிற்கு வெளிக்காட்ட முயற்சிக்கும் அதே நேரம் நாட்டிற்குள் அதன் செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகவும் எதிராணவையாகவுமே உள்ள அதனது இருவழிப்பாதைப் பயணமேயாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் திருவுருவம் பொறிக்கப்பட்ட தாள்களை உதாசீனம் செய்தல் முறையோ?



## வித்தியாசமாய் சிந்திப்போம்

மனிதனின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டதொன்றாக மதம் உள்ளது. உலகில் கணிசமானவர்கள் தமது உழைப்பிலும், நேரத்திலும் ஒருபகுதியினைதாம் சார்ந்த மதத்திற்காக செலவிடுகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஒரு சிலர் மத நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாதவர்களா




கவும், ஈடுபாடில்லாதவர்களாகவும் காணப்பட்டாலும் ஏதோ ஒருமதத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்களே பரந்தளவில் காணப்படுகின்றார்கள். பெரும்பாலான மதத்தவர்கள் வழிபாடுகளுக்காக தாம் சார்ந்த மதக் கடவுளரை உருவச்சிலைகளாக, சித்திரங்களாக, படங்களாக பல்வேறு வடிவத்தில் வணங்குகிறார்கள். இவ்வாறான கடவுள் உருவங்கள் உயர்ந்த மதிப்பில் அவ்வவ் மதத்தினரால் பார்க்கப்படுகின்றன. இந்துசமயத்தில் சிவன், அம்மன், விநாயகர், முருகன், விஷ்ணு எனப் பல்வேறு கடவுளர் உருவங்களுண்டு. கத்தோலிக்கத்தவர்கள் யேசு, அந்தோனியார் எனவும் பௌத்தர்கள் புத்தபகவான் எனவும் உருவங்களை வழிபாடு செய்கிறார்கள். இங்கு குறிப்பிடும் விடயம் என்னவென்றால் இவ்வாறு உயர்நிலையில் பேணப்படும் இத் தெய்வத் திருவுருவங்களை நாம் பயன்படுத்தும் முறைகள் பற்றிய கருத்து வெளிப்படுத்தலேயாகும். இவ்வுருவங்களை நாம் அதீத பக்தி காரணமாகவோ அல்லது ஈடுபாடு காரணமாகவோ பல்வேறு இடங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தும் போது அவை ஏற்றுக்கொள்ள முடியாத பாவனையில் சென்று விடுவது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. எமது ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவங்களிலும் கும்பாபிஷேகங்களின் போதும் பெருநாட்களின் போதும் பத்திரிகைகளில் சிறப்பு மலர்களை வெளியிடுகின்றோம்.

அதன்போது எமது ஆலயங்களின் படம், இறைவனின் திருவுருவப்படம் என்பன அம்மலர்களில் பதிய்ப்படுகின்றன. தொடர்ந்து வரும் நாட்களில் அச்சிறப்புமலர் பிரதிகள் குப்பைத் தொட்டிகளில், வீதியோரங்களில் தேடுவாரற்ற நிலையில் கிடக்கின்றன. பல்வேறு தேவைகளுக்கு அப்பத்திரிகைத்தாள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன்போது எமது மதிப்பார்ந்த வணக்கத்திற்குரிய தெய்வங்களின் திருவுருவங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத மதிப்பிழப்பிற்குள்ளாகின்றன. இவ்வாறு வெளியிடப்படும் சிறப்புமலர்களில் தெய்வத்திருவுருவங்களைத் தவிர்த்தல் நல்லதல்லவா? நிறுவனங்கள் வெளியிடும் நாட்காட்டிகள், திருமண மற்றும் ருதுசாந்தி அழைப்பிதழ்கள், வியாபார நிலையங்களின் பற்றுச்சீட்டுக்கள் போன்றவற்றிலும் கடவுளின் படங்களை அச்சிடுகின்றோம். இது இறைவன் மீது கொண்ட பக்தி காரணமாக கடவுளை முன்னிலைப்படுத்தி நமது காரியங்களைச் செய்வதற்காக நடைபெறுவதாக இருக்கலாம். ஆனால் இவ்வாறான பிரசுரங்கள் எமது தேவைகள் முடிந்ததும் ஏற்றுக்கொள்ள முடியாதநிலையை அடைந்து விடுகின்றன. நாம் கோயில்களில் சென்று அர்ச்சனை வழிபாடுகளை செய்கின்றோம். இந்து ஆலயங்களில் குருவானவர் விபூதி பிரசாதங்களை வழங்குகின்றார். அதனை பக்குவமாக ஒரு சிறிய பையில் தருகின்றார்கள். விபூதி பிரசாதத்தை எடுத்தபின் அப்பையை என்ன செய் வது என ஏங்குபவர்களைப் பார்த்திருக்கின்றேன். அச்சிறிய பையில் ஆலயப்பெயருடன் இறைவனின் படமும அச்சிடப்பட்டிருக்கும். அதனை நிலத்தில் போடவோ குப்பையாக கருதவோ முடியாது. அண்மையில் எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். முன்னுக்கிருந்த மல்லிகைப் பந்தலில் ஒரு சொப்பிங் பை பொதியாகத் தொங்கிக் கொண்டிருந்தது. நண்பனிடம் வசாரித்தேன். அவர் "எனது மனைவி செவ்வாய், வெள்ளி மற்றும் விசேட தினங்களில் கோயிலுக்கு போகும் போது அர்ச்சனை செய்த பிரசாதம் வைத்த வெறும் பைகளை சேகரித்து ஒரு பொதியாய் கட்டிவைத்திருப்பார்.

நான் கீரிமலைப்பக்கம் போகிற போது அதைக் கடலில் கொண்டு போய் போடவேண்டும். அந்த வெற்றுப் பைகள் சும்மா கிடந்து கால்களுக்குள் மிதி படலாகாதல்லவா?" என்று ஒரு பிரசங்கமே செய்து முடித்தார். விபூதிப் பிரசா தத்தை கோயில்களில் பக்குவமாக வழங்க வேண்டும் என்ற ஒழுங்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.

ஆயினும் இறைவனின் திருவுருவம் பொறிப்பதை தவிர்க்கலாமல்லவா? அந்த நண்பர் இது மட்டுமல்ல கடவுள் படம் பதியப்பட்ட இதுபோன்ற பல தாள்களை நான் கீரிமலை கடலில் சேர்ப்பதுதான் வழமை என்றும் சொன்னார்.

எந்த மதமாயினும் அதன் பெருமைக்கும் கீர்த்திக்கும் மாசு ஏற்படாவண்ணம் நடந்து கொள் ள வேண்டியது எம் அனைவரினதும கடமையாகும்.

நாம் பின்பற்றும் மதங்களின் வழிபாட்டிற்குரிய திருவுருவங்களை மதிபார்ந்த நிலையில் முழுநதளவு செயற்படுத்து வதற்கு நாம அனைவரும் முன்வர வேண்டும்.

**வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன்**
**(ஓய்வுநிலை அதிபர்)**

# சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை தமிழர் கட்சி முற்றுகையிட்டு போராட்டம்



இலங்கை இராணுவ கருத்தரங்கில் இந்தியா சார்பில் யாரும் பங்கேற்கக்கூடாது என வலியுறுத்தி நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கில், இந்திய இராணுவத் தளபதிகளும், அதிகாரிகளும் பங்கேற்பார்கள் என பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு அறிவித்துள்ளது.

மேலும், பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமியும் பங்கேற்க இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

மத்திய அரசின் இந்த முடிவுக்கு தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கை இராணுவ கருத்தரங்கில் இந்திய அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளக்கூடாது என வலியுறுத்தி சென்னை, நுங்கம் பாக்கத்திலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு, நாம் தமிழர கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில், நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் உட்பட 100இற்கும் மேறபட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்த போராட்டத்தின் போது, இலங்கைக்கு எதிராக பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன. (6)

# படிப்பு சலித்துப்போய் வெளியேறிய பிரதமர்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் வாழ்க்கைப் பாதையில் அவர் பிரதமராக இருந்த 10 ஆண்டு காலம் நீங்கலாக பிற பகுதிகளை அவரது மகளான தமன் சிங் நூலாக தொகுத்து வெளியிட்டுள்ளார்.

உயர்நிலை பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மன்மோகன் சிங், டாக்டருக்கு படிக்க விரும்பி, 1948 ஆம் ஆண்டில் அதற்கான புகுமுக கல்வியான 'எஃப்.எஸ்.சி.' பயில பஞ்சாப் மாநில தலைநகரான அம்ரிஸ்ட்டரில் உள்ள கல்ஸா கல்லூரியில சேர்ந்து, மருத்துவம் சார்ந்த பாடப் பிரிவை தேர்வு செய்து படித்து வந்தார்.

ஆனால், சில மாதங்களுக்குள்ளாகவே அந்த படிப்பின் மீதான நாட்டம் குறைந்து, அந்த கல்லூரியில் இருந்து வெளியேறிவிட்டார்.

பின்னர், அவரது தந்தை நடத்தி வந்த கடையில் அவருக்கு ஒத்தாசை செய்யச் சென்ற அவருக்கு தண்ணீர் எடுத்து வருவது, தேநீர் வாங்கி வருவது போன்ற குற்றேவல்கள் மட்டுமே தரப்பட்டன.

இதனால், அந்த கடையில் தந்தைக்கு நிகரான சமஉரிமை தனக்கு இல்லை என்பதை உணர்ந்து அதே ஆண்டில் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரப் பாடத்தை தேர்வு செய்து படித்து, பின்னர் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டயப்படிப்பு கற்க சென்ற மன்மோகன் சிங், கல்விச் செலவுகளை சமாளிக்க பொருளாதார ரீதியாக சிரமப்பட்ட நிகழ்வுகளை இந்த நூலில் தமன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

சாப்பாட்டுக்கு அதிகம் செலவாகும் என்பதால், 'கேட்பரீஸ்' சொக்லேட்டை மட்டும் சாப்பிட்டு, தனது தந்தை பசியாற்றிக் கொண்ட கால கட்டத்தையும் சுவைபட பதிவு செய்துள்ள நூலாசிரியர், தங்களது உறவினர்களுக்கே தெரியாமல் அவர்களுக்கு 'பட்டப்பெயர்'களை சூட்டி, அவற்றை இரகசியமாக குறிப்பிட்டு மகிழும் மன்மோகன் சிங்கின் நகைச்சுவை உணர்வையும் அவர் சுவாரஸ்யமாக குறிப்பிட்டுள்ளார். (6)

# தமிழர் பிடிவாதத்தை கைவிடவும் வேண்டும்

## அவ்டேஸ் கௌசல் தெரிவிப்பு



சிறுபான்மை தமிழர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கோருவேன் என காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்திய மனித உரிமை பணியாளர் அவ்டேஸ் கௌசல் இந்தியன் எக்ஸ்பிரசிற்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானம் என்பது அந்த நாட்டிற்கு மாத்திரமல்லாமல் முழு தென்னாசியாவிற்கும் முக்கியம் என்பதால் சிறுபான்மை தமிழர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கோருவேன். அதேபோன்று தமிழர்களும் தங்கள் பிடிவாதமான கொள்கைகளை கைவிடவேண்டும். அரசாங்கத்துடன் பேச வேண்டும் என வலியுறுத்துவேன்.

இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றது, ஆனால் தமிழர்கள் பொலிஸ் அதிகாரத்தை கோருவதால் முட்டுக்கட்டை நிலை உருவாகியுள்ளது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை செவிமடுத்து பொதுநலவாய மாநாட்டிற்கு செல்லாமல் விட்டதன் மூலம் மன்மோகன் சிங் பெரும் தவறிழைத்தார், நான் இது குறித்த எனது அதிருப்தியை அவருக்கு தெரிவித்தேன் என தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.படை மீது தாக்குதல்

ஆபிரிக்க நாடான மாலியில் அமைதியை ஏற்படுத்தும் பணியில் ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் மாலியின் திம்புக்டு பிராந்தியத்திற்கு உட்பட்ட பெர் என்ற இடத்தில் ஐ.நா. அமைதிப்படையினர் சென்ற வாகனங்கள மீது நேற்று முன்தினம் தற்கொலைப் படை தீவிரவாதிகள் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் வீரர்கள் 2 பேர் கொல்லப்பட்டதுடன். 9 பேர் படுகாயம் அடைந்தனர். கொல்லப்பட்ட வீரர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று முதல் கட்ட தகவலில் தெரியவில்லை.

பின்னர் இதுகுறித்து அமைதிக்குழு அதிகாரி ஒருவர் கூறுகையில், இரு வீரர்களும் ஆபிரிக்க நாடான புர்கினா பசோவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்தார்.

இந்த தாக்குதலை மாலியில் உள்ள ஐ.நா. பொதுச் செயலாளரின் சிறப்பு துணை பிரதிநிதி டேவிட் கிரெஸ்லி கண்டித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இங்கு அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் நிலை நிறுத்துவதற்கு ஐ.நா. அமைதிப்படையினர் கடுமையான விலை கொடுத்து வருகின்றனர்.

இங்கு கடந்த 2 வாரத்தில் ஐ.நா. அமைதிப்படை மீது நடத்தப்பட்ட 3 ஆவது தாக்குதல் இதுவாகும். (6)

## மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேல் – ஹமாஸ் இடையில்

# மீண்டும் போர் ஆரம்பம்





இஸ்ரேல் நாட்டின் வெஸ்ட் பேங்க் பகுதியில் உள்ள ஹெப்ரான் நகரில் இருக்கும் ஒரு யூத பாடசாலையில் படித்து வந்த நப்தாலி பிரெயெங்கெல், கில் அட் ஷயிர், இயால் இஃப்ரா ஆகிய மூவர் கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி காணாமற போனார்கள்.

அவர்களை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுவந்த வேளையில், கொலை செய்யப்பட்ட நிலையில் வெஸ்ட் பேங்க் பகுதியில் அவர்கள் மூவரும் பிணமாக கண்டெடுக்கப்பட்டனர்.

இந்த படுகொலைக்கு காஸா பகுதியில் வாழும் ஹமாஸ் பிரிவினர்தான் காரணம் என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியது.


இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் படைகளுக்கும் இடையில் கடந்த மாதம் தொடங்கிய சண்டையில் சுமார் 2 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

எகிப்து ஜனாதிபதியின் தலையீட்டின் பேரில் தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, இரு தரப்பினருக்கும் இடையில் கெய்ரோவில் தற்போது இரண்டாவது சுற்று சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேலிய மாணவர்கள் 3 பேரை கடத்திக் கொன்றதாக தேடப்பட்டு வந்த இருவரின் வீடுகள் மீது இஸ்ரேல் நாட்டின் போர் விமானங்கள் நேற்று அதிகாலை குண்டுகளை வீசி ஆவேச தாக்குதல் நடத்தின.

வெஸ்ட் பேங்கின் தெற்கு பகுதியில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் இஸ்ரேல் படைகளால் தேடப்பட்டு வந்த ஹுஸ்ஸம் கவாஸ்மே மற்றும் அமர் அபு ஆயிஷா ஆகியோரின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதாகவும், மர்வான் கவாஸ்மே என்பவரின் வீட்டுக்கு சீல் வைக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6)

## ஈராக்கின் மொசூல் அணைக்கட்டினை குர்தீஷ் படையினர் கைப்பற்றியுள்ளனர்



ஈராக்கின் வட பகுதியில் உள்ள 15 இற்கும் மேற்பட்ட நகரங்களை கடந்த மாதம் கைப்பற்றிய ஜிஹாதிகள் என்றழைக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ படையினர் அவற்றை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

ஈராக்கிற்கு ஆதரவாக குர்தீஷ் படையினருக்கு போர் ஆலோசனை வழங்க போர் தந்திர நிபுணர்கள் கொண்ட ஒரு பெரிய குழுவினை அமெரிக்கா அனுப்பி வைத்தது. மேலும், குர்தீஷ் படையினருக்கு ஏராளமான ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்கி வருகிறது.

இதற்கிடையில், மொசூல் நகரத்தில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மொசூல அணையை இரு வாரங்களுக்கு முன்னர் கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ படையினர், அந்த அணைக்கட்டை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

ஈராக்கில் உள்ள அணைகளில் மிகப்பெரிய அணையான இதிலிருந்து தயாரிக்கப்படும் புனல் மின்சாரம் அந்த பிராந்தியத்தில் உள்ள பல பகுதிகளின் மின்சார தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது.

அதுமட்டுமின்றி, விளை நிலங்களின் பாசனத்துக்கான ஒரே நீராதாரமாகவும் இது விளங்கி வருகிறது.

இப்படி, பல வகைகளில் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் மொசூல் அணையை ஐ.எஸ்.ஐ.எஸ் படைகள் வசமிருந்து மீட்பதற்காக அமெரிக்க போர் விமானங்களின் துணையுடன் குர்தீஷ் படையினர் உச்சகட்ட தாக்குதல் நடத்தினர்.

அணையை சுற்றி முகாமிட்டு இருந்த ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகள் மீது அமெரிக்க போர் விமானங்களின் துணையுடன் நேற்று முன்தினம் வான் வழி தாக்குதல் மற்றும் தரைவழி தாக்குதல் நடத்திய குர்தஷ் படையினர், அணையை கைப்பறறிவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணையை சுற்றியுள்ள பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி மற்றும் வெடிகுண்டுகளை அகற்றும் பணியில் குர்தஷ் படையினர் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பணி சில மணி நேரங்கள் நீடிக்க வாய்ப்புள்ளது. கடந்த 7ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். படையினரால் கைப்பறப்பட்ட மொசூல் அணையை 10 நாளில் மீண்டும் குர்தஷ் படையினர் அமெரிக்கா உதவியுடன் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## மாயமான மலேசிய விமானத்தில் பயணித்தவர்களின் பணம்மோசடி

### பெண் வங்கி ஊழியரும் அவரது கணவரும் கைது

காணாமற் போன மலேசிய எம்.எச். 370 விமானத்தில் பயணித்த 4 பயணிகளின் வங்கிக் கணக்குகளிலிருந்து 30ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை திருடிய குற்றச்சாட்டில் மலேசிய பெண் வங்கி உத்தியோகத்தரொருவரும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எம்.எச். 370 விமானம் காணாமற் போய் ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் அந்த விமானத்தில் பயணித்த இரு மலேசிய பயணிகளதும் இரு சீன பயணிகளதும் வங்கிக் கணக்குகளிலிருந்து மேற்படி பணம் மர்மமான முறையில் திரும்பப் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் மலேசிய கோலாலம்பூர் நகரில் செயற்பட்டு வந்த எச்.எஸ்.பி.சி. வங்கிக் கிளையின் முகாமையாளர் விமான பயணிகளது கணக்குகளிலிருந்து பணம் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் செய்த முறைப்பாட்டையடுத்து அந்த வங்கியில் பணியாற்றிய 33 வயது பெண் உத்தியோகத்தரும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த பெண் உத்தியோகத்தர் அந்த வங்கியில் 10 வருட காலமாக பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் இந்த திருட்டுடன் தொடர்புடைய பாகிஸ்தானை சேர்ந்த பிறிதொரு சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

வங்கி சி.சி.ரி.வி. வீடியோ கருவி மூலம் எடுக்கப்பட்ட படங்கள் மூலமே சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானிய சந்தேக நபர் அந்த விமானத்தில் பயணித்த நான்காவது பயணியொருவரின் கணக்கிலிருந்து பல்வேறு தன்னியக்க பண இயந்திரங்களினூடாக பணத்தை திருடியுள்ளதாக கூறப்படுகிறது.

மலேசிய எம்.எச். 370 விமானம் கடந்த மார்ச் 8ஆம் திகதி 239 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் கோலாலம்பூரிலிருந்து பீஜிங் நகரை நோக்கி பயணித்த வேளை காணாமற் போனது என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## வைத்தியசாலையின் மீது கடும் தாக்குதல்

### எபோலா நோயாளிகள் 17 பேர் தப்பி ஓட்டம்

லைபீரியாவின் தலைநகரான மொன்ரோவியாவில் எபோலா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலையில் புகுந்து ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியது.

நாட்டில்எபோலா நோயே இல்லை என்று கோஷமிட்ட அக்கும்பல் வைத்தியசாலையின் கதவை உடைத்து அங்கிருந்த மருந்துகள் உள்ளிட்ட பொருட்களை தூக்கிச் சென்றது.

இத்தாக்குதலை பயன்படுத்தி 17 எபோலா நோயாளிகளும் தப்பி ஓடிவிட்டதாக இச்சம்பவத்தை பார்த்த ரெபேப்பா வெஸ்சே என்ற பெண்மணி தெரிவித்தார்.

இதனை லைபீரியாவின் சுகாதாரத்துறை ஊழியர்கள் கூட்டமைப்பை சேர்ந்த ஜார்ஜ் வில்லியம்சும் உறுதிப்படுத்தினார்.

வில்லியம்ஸ் மேலும் கூறுகையில், தப்பிச்சென்ற 17 பேருக்கும் எபோலா நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது என்றும், அவர்களுக்கு முதற்கட்ட சிகிச்சை வழங்கப்பட்டு வந்ததாகவும் கூறினார்.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் அனைவரும் இளம் வயதினர் என்றும் அவர்கள் தங்கள் கைகளில ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் வெஸ்சே மேலும் தெரிவித்தார்.

அந்நாட்டு ஜனாதிபதி எல்லன் ஜானசன் சர்லீப்புக்கு எதிராக கோஷமிட்ட அவர்கள் நாட்டில் எபோலா என்ற நோயே கிடையாது என்று கோஷமிட்டதாக அவர் தெரிவித்தார். (6)

## 4500 பேருக்கு ஆஸியில் தஞ்சம்

### அரசாங்கம் அறிவிப்பு

ஈராக் மற்றும் சிரியாவைச் சேர்ந்த கிட்டத்தட்ட 4 ஆயிரத்து 500 பேரை தமது நாட்டில் குடியமர்த்த முன்வந்துள்ளதாக அவுஸ்திரேலியன குடியேற்றத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிஸன் தெரிவித்தார்.

அவுஸதிரேலியா ஒவ்வொரு ஆண்டும் உள்வாங்கும் அகதிகள் எண்ணிக்கையின் பகுதியாக இவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

தஞ்சம்கோரி வரும் படகுகளை தடுத்து நிறுத்துவதில் அரசாங்கம் கண்டிருக்கின்ற வெற்றி காரணமாக இந்த 4ஆயிரத்து 500 பேருக்கும் இடம் கிடைத்துள்ளதாக ஸ்காட் மொரிஸன் தெரிவித்தார்.

சட்டவிரோத படகுகள் மூலம் வருவோருக்கு அவுஸ்திரேலியா தஞ்சமளிக்காது என்று ஏற்கனவே அறிவிதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைப்பவனுக் குக் கொஞ்சமாவது புத்தி உண்டு.

– புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொதுமை தந்த இழப்பின் வலி மிகவும் கொடுமையானது

ஒரு விடயத்தைப் பல தடவைகள் திரும்பத்திரும்பக் கூறவேண்டிய தேவையில்தான் இப்போதைய எங்கள் நிலைமையுள்ளது. அந்தளவிற்கு முக்கியமான விடயங்கள் குறித்தும் உரியவர்கள் சுணைகெட்ட நிலையில் இருக்கின்றனர். இதன் காரணமாகவே மீளவும் வலியுறுத்துகின்ற தேவைப்பாடுகள் உள்ளன.

அந்த வகையில் எங்கள் மக்களுக்கான உதவித் திட்டம் என்பது குறித்துப் பல தடவைகள் இவ்விடத்தில் கூறியிருந்தாலும் திரும்பவும் அதுபற்றி வலியுறுத்த வேண்டிய தேவையுள்ளது.

வடக்கு மாகாணம் அதிலும் குறிப்பாக வன்னிப் பிராந்தியம் போரின் கொடூரத்தால் பேரவலத்தை சந்தித்த மண். உலகம் முழுமையும் எமது பிரச்சினை பற்றிப் பேசுவதன் பின்புலமாக வன்னிப் பேரவலத்தைக் குறிப்பிடலாம்.

எங்களின் பிரச்சினை பற்றி யார் கதைப்பதாக இருந்தாலும் அதில் வன்னிப் போரின் இழப்புகளே முதன்மை பெறும். அந்தளவிற்கு மனிதப் பேரவலத்தில் சிக்கிய எங்கள் மக்களின் அனுபவங்கள் மனித ஜென்மம் இருக்கும்வரை நினைவுபடுத்தற்குரியது.

வன்னிப் போரின் அவலம் பற்றி நாம் கதைக்கும் அதேநேரம் அந்த மனித அவலத்தில் தாயை; தந்தையை; பிள்ளையை ; கணவனை இழந்து நிர்க்கதி நிலையில் நிற்கும் குடும்பங்களின் நிலைமைபற்றி நாம் சிந்திப்பது மிகவும் முக்கியமானது.

ஆண்டுக்கு ஒரு தடவை நினைவேந்தல் செய்வதோடு எங்கள் கடமை முடிந்து விட்டது என்று யாரேனும் நினைப்பார்களாயின் அதுவே, சிற்றறிவின் சிந்தனையாகும்.

போரில் இறந்தவர்களை நினைவு கூருகின்ற அதேநேரம் இழப்புக்களை தங்கள் இதயங்களில் சுமந்தவண்ணம் உழைக்க வழியில்லாது ஒருநேர உணவுக்காக ஏங்கும் குடும்பங்களின் பரிதாப நிலைமைக்கு ஒத்தடம் கொடுக்க நாங்கள் ஏதேனும் செய்தோமா? அவ்வாறான ஏற்பாடுகள் ஏதாவது எங்களிடம் உண்டா? இவை பற்றி நாம் திரும்பத் திரும்பச் சிந்திக்க வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களின் அவலம் போக்க நாம் தயார்ப்படவில்லையாயின் எங்களின் இலக்கும் போக்கும் படுதோல்வி காணும் என்பது சர்வ நிச்சயம்.

தேசம், இனம், உரிமை என்பன பொதுமையானவை. அந்தப் பொதுமை தந்த இழப்புகளை தனியன்களாக அனுபவிக்கும் போது அது ஏற்படுத்தக்கூடிய வலி சாதாரணமானதல்ல.

எனவே ஒரு பொதுமை ஏற்படுத்திய இழப்புகளை சாதாரணமானவையாக விட்டுவிடாமல் தமிழ்த் தேசம் தங்களுக்குக் கைகொடுத்தது என்ற உணர்வை இழந்தவர்களின் மனங்களில் ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக எங்கள் புலம் பெயர் உறவுகளின் நிதி உதவியைப் பெற்று, மாபெரும் உதவித்திட்டத்தை வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கும் பணியை உரியவர்கள் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

இந்த உதவித்திட்டத்தில் உள்நாட்டில் இருந்தும் கணிசமான நிதியுதவியைப்பெற முடியும். கால் இல்லை, கை இல்லை, கண் இல்லை, உழைக்கப் பிள்ளை இல்லை, பெற்ற பிள்ளைகளை வளர்க்க வழி இல்லை என்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் நிதி மற்றும் உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த உதவிகள் போரின் இழப்புகளைச் சந்தித்த குடும்பங்களைத் தாங்கிக்கொள்ள, அதன் மறுமுனையில் எங்களின் உரிமை என்ற கோசம் எழுப்பப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் நிரலாகவும் நிரையாகவும் நகர்த்தும்போதே எங்களின் வரைபு வெற்றிதரும்.

# ஆணைக்குழுவின் தலையீட்டையடுத்து பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலம் மூடப்பட்டிருந்த யாழ். மாவிட்டபுரம் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை யாழ். மனிதவுரிமை ஆணைக்குழுவின்நடவடிக்கையையடுத்து இயங்க ஆரம்பித்துள்ளது.

45 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட குறித்த பாடசாலையானது நீண்டகாலமாக கல்வி நடவடிக்கைகள் எதுவுமின்றி மூடப்பட்டிருந்தது.

பாடசாலை மூடப்பட்டுள்ளமைக்கான காரணத்தைவிளக்குமாறும்அதனை மீளத் திறந்து கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கோரி வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வியமைச்சு, மாகாண கல்வியமைச்சின் செயலர் ஆகியோருக்கு யாழ். பிராந்திய மனிதவுரிமை ஆணைக்குழு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

இதற்கமைய மனிதவுரிமை ஆணைக்குழுவின் விளக்கம் கோரலுக்கு மேற் குறிப்பிட்ட பாடசாலைக்கு இலங்கை ஆசிரியர் சேவை அதிபர் 2-1 தரத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலையின் நிர்வாகம் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் விளக்கமளித்திருந்தார்.

குறித்த பாடசாலை அமைந்துள்ள இடம் அண்மையில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுவதனால் பாடசாலையில் காணப்படும் மாணவர் தொகை மிகக் குறைவாகவே காணப்பட்டு வருகின்றது. இப்பாடசாலையை அண்மித்து பிரபல பாடசாலைகள் காணப்படுவதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் சேர்ப்பிப்பதற்கான முயற்சிகளையே மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இப்பாடசாலையில் மாணவர்கள் இணைவது மிகவும் குறைவாக உள்ளது.

இந்நிலையில் குறித்த பாடசாலையில் அப்பகுதி மாணவர்களை இணைப்பதற்கு பாடசாலையின் அதிபர், கிராம சேவையாளருடன் தொடர்புகொண்டு அப்பகுதி மாணவர்களின் பெற்றோர்களை அணுகி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மீள்குடியேற்றப் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த பாடசாலை சிறந்த முறையில் இயங்குவதற்கு அப்பகுதி மக்கள் தமது பிள்ளைகளை குறித்த பாடசாலையில் சேர்ப்பித்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (6-4)

# 400 வருடம் பழைமைவாய்ந்த பள்ளிவாசல் இடித்து தரைமட்டம்

## திருமலையில் தொடரும் பதற்றம்

(கொழும்பு)

400 வருடம் பழைமைவாய்ந்த திருமலை வெள்ளைமணல் கருமலையூற்று பள்ளிவாசல் நேற்று முன்தினம் காலை இனந்தெரியாதோரால் இடித்து நொறுக்கி தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது படையினரின் கட்டுப்பாடடுப்பகுதிக்குள் இருந்து வரும் இப்பள்ளிவாசல் தகர்க்கப்பட்டமை நாசகாரச் செயல் என்றும் பள்ளி நிர்வாகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் பள்ளியை நாம் நோட்டமிட்ட போது இருந்த இடம் தெரியாமல் அது தரைமட்டமாக்கப்பட்டுள்ளது என பள்ளி நிர்வாகம் தெரிவித்தது.

இதுபற்றி பள்ளி நிர்வாகத்தின் தலைவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று நாட்களாக கடும் மழை பெய்து கொண்டிருந்தது. இந்த மழை பெய்த நேரத்தைப் பயன்படுத்தி பள்ளிவாசல் கனரக இயந்திரத்தை பயன்படுத்தி உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது பள்ளி இருந்த இடமே தெரியவில்லை. பள்ளியை பார்வையிடுவதற்காக அனுமதி கேட்டோம். நாங்கள் பார்ப்பதறகு அனுமதிக்கப்படவில்லை.

2007 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிவாசல் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொணடு வரப்பட்டுள்ளதன் காரணமாக அங்கு குடியிருந்த 350 குடும்பங்களுக்கு மேற்பட்டவர்கள் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

400 வருடங்களுக்கு மேல் அங்கு குடியிருந்து மீன்பிடித் தொழிலை செய்துவந்த எம்மை 2009 ஆம் ஆண்டுமுதல்செல்லவிடாது படையினர தடுத்துள்ளமையால் 350 குடும்பங்கள் தமது மீன்பிடித்தொழிலையும் குடியிருப்புக்களையும் இழந்துள்ளன.

கருமலையூற்று ஜும்மா பள்ளிவாசல் 1885 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு மீணடும் அது 1985 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. அதுவுமின்றி தறபோதைய கிழக்கு மாகாண முதல் அமைச்சர் 2007 ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த வேளையில் மீலாநபி நிதியத்திலிருந்து 5 இலட்சத்து 80 ஆயிரத்தை ஒதுக்கியதன் பேரில் மீணடும் அது புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

2009 ஆம் ஆண்டு முதல் கருமலை யூற்றுப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளும் மற்றும் ஏனைய இடங்கள் கடற்படைக் கட்டுப்பாட்டுக்குள்ளும் இருக்கின்றன. நேற்றையதினம் கனரக இயந்திரமொன்றின் சத்தம் பள்ளிவாசலை அண்டிய பகுதியில் கேட்டபோது என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய மக்கள் முயற்சி செய்தார்கள்.

இந்த நாசகார செயல் பற்றி கிழக்கின் முதல் அமைச்சருடனும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கினுடனும்தொடர்பு கொண்டு தெரிவித்தமைக்கு அமைய முதல் அமைச்சர் நஜீப் இராணுவத் தளபதியோடு தொடர்பு கொண்டு உரையாடினார்.

இராணுவத்தளபதி அப்படியொரு பள்ளி இருக்க வில்லையென தன்னிடம் கூறியதாக முதலமைச்சர் எம்மிடம் தெரிவித்தார் என பள்ளிவாசல் தலைவர் தெரிவித்தார். (6)

# பொருளியல் ஆசிரியர் வரதராஜன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியவாதியும் பிரபலபொருளியல் ஆசானுமான சின்னத்துரை வரதராஜன் நேற்றுத் திங்கட்கிழமை தனது 63-வது வயதில் காலமானார்

நோய்வாய்ப்பட்டு தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் நேற்றுக் காலமானார்.

இவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸில் கடந்த 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார்.

அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முனணியின் முதலாவது தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஹென்றியரசர் மாணவன் ஜேர்மனிக்குப் பயணம்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் ஞா.அன்ரனிராஜ் கால்பந்தாட்ட பயிற்சிக்காக ஜேர்மனி பயணமாகிறார். அகில இலங்கைரீதியாக கால்பந்தாட்ட விசேட திறமையடிப்படையில் இவர் தெரிவு செய்யப்பட்டு ஜேர்மனிக்குப் பயணமாகிறார்.

16 வயதுக்குட்பட்ட மாணவர்களில் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் அன்ரனிராஜும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாணவன் அண்மையில் என் படகின் பாதை என்ற கவிதை நூலை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**19.08.2014இற்கான வினா**

**இந்துக்களின் புனித நூலாகிய ஸ்ரீமத் பகவத்கீதை என்பதில் அத்தியாயம் நான்கில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஞான யக்ஞம் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?**

**18.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**

**சின்மயம் என்றால் என்ன?**

☞ சித்+ மயம்: அறிவுமயம்

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## பொறுமையே பெருமை



- உனக்கு பிடித்ததைச் செய்ய விரும்புவது போல, மற்றவரும் விருப்பமானதைச் செய்ய சுதந்திரத்தை கொடு.
- உன்னிடத்தில் மறைந்திருக்கும் சக்தியை வெளிப்படுத்தும் செயலே புண்ணியம் என்பதை உணர்ந்து கொள்.
- அனுபவம் கற்றுத் தரும் படிப்பினையை விடச் சிறப்பான மதிப்பு வேறு எதற்கும் கிடையாது.
- மன உறுதி இருக்குமானால், போர்க்களத்தில் கூட ஆன்மீகப்பயிற்சி பெற முடியும்.
- ஆராய்ச்சி என்னும் வலைக்குள் கடவுள் ஒருபோதும் அகப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் மாதம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் அவற்றுக்கான விண்ணப்பபப்படிவங்களை நிரப்பி எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உடுத்துறை செந்தமிழ் வி.கழகத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் தாழையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் தாழையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் 27 ஆவது நிமிடத்தின் கணேசானந்தா விளையாட்டுக் கழக வீரர் நிஜாந்தன் மிகவும் அற்புதமான கோல் ஒன்றைப் போட்டார். இந்த நிலையில் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.



இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியது. இரு அணி வீரர்களிடமும் பெரும் மாற்றம் காணப்பட்டது. அவர்கள் தத்தமது அணிக்கான கோலைப் பெறுவதற்கு முனைப்புக்காட்டி முன்னேறித் தாக்கியபோதும், பின்கள வீரர்கள் அவற்றை இலாவகமாகத் தடுத்தாட 1:0 என்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வர கணேசானந்தா வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக் கழகமும் வத்திராயன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.

இடைவேளைக்கு முன் இரு அணியினரும் சமபலத்துடன் மோதினர். இதனால் இரு அணிகளாலும் கோல்களைப் போட முடியவில்லை. ஆனால் இடைவேளைக்கு பின் ஆட்டம் ஆரம்பமானதும் நெடியகாடு விளையாட்டுக் கழகம் புது உத்வேகத்துடன் விளையாடி பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

அந்த அணியைச் சேர்ந்த பகீரதன் 32 ஆவது நிமிடத்திலும், மதன் 35, 44, 47 ஆவது நிமிடங்களிலும், விஸ்வா 54 ஆவது நிமிடத்திலும், வசி 56 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட 6:0 என்ற கோல்கள் அடிப்படையில் நெடியகாடு வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுது. (க)

## றம்சான் வெற்றிக் கிண்ணம் நயினாதீவு இஸ்லாம் வசமானது

நெடுந்தீவு சுப்பர் கிங்ஸ் அணியை நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழகமும் நயினாதீவு இஸ்லாம் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய றம்சான் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. கடந்த வாரம் நயினாதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடுந்தீவு சுப்பர்கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் லியா உல் ஹக் 39 ஓட்டங்களையும் கஜீபன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் நெடுந்தீவு சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் டிலான் 4 இலக்குகளையும் தயாளன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெடுந்தீவு சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் தயாளன் 27 ஓட்டங்களையும் றஜீவன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி சார்பில் கஜீபன் 3 இலக்குகளையும் ஜசீர் அரபாத் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழக அணிவீரன் கஜீபன் தெரிவானார்.

ஆட்டதொடர்நாயகனாக நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணிவீரர் லியால் உல் ஹக் தெரிவானார். (க)

# ஊரெழு விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்

ஊரெழு விளையாட்டுக் கழகத்திற்கும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிவல்வைறெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் ஆரம்பமாகிய ஆட்டத்தில் 11 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணிக்கு சுயாதீன உதை ஒன்று கிடைத்தது. அதனை அந்த



அணி வீரர் கலைஞானரதன் அழகாக உதைக்க அது எதிரணியின் கோல் கம்பங்களுக்குள் சரண்புகுந்தது.

தொடர்ந்து இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்கும்போது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக வீரர் எதிரணியின் கோல் கம்பங்களுக்கு அண்மையில் தவறு இழைத்ததால் எதிரணிக்குத் தண்டனை உதை வழங்கப்பட்டது.

அதனைச் சரியாகப் பயன்படுத்தி நவஜீவன்ஸ் அணி வீரர் உசாந்த தமது அணிக்காக இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் ஆட்டத்தின் போக்கில் அனல் பறந்தது. இரு அணி வீரர்களும் முன்னேறித் தாக்குவதிலும் ஊடுருவித் தாக்குவதிலும் முழுக் கவனத்தையும் செலுத்தி மோதினர்.

இதனால் இடைவேளைக்குப் பின்னர் கோல் போடுவதற்கு இரு அணியினரும் கடுமையாகப் போராடினர். இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு சில செக்கன்கள் இருக்கையில் றோயல் அணியின் சோபன் ஒரு கோலைப் போட ஆட்டம் 2:1 என்ற அடிப்படையில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மயிலங்காடு ஞானமுருகன் விளையர்ட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஆட்டம் ஆரம்பமாகி 27 ஆவது நிமிடத்தில் ஜெகன் ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் 1:0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் அணி வீரர் ஞானம் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 10 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியைச் சேர்ந்த ஜெகனும் 16 ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த தீபனும் கோல் போட 3:1 என்ற அடிப்படையில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது. (க)

## 125 வருட கால சாதனையை தகர்த்தார் ரங்கன ஹெரத்





பாகிஸ்தான் அணிக்கெதிராக 9 விக்கெட்டுகள் கைப்பற்றியது மூலம் ரங்கன ஹெரத் இங்கிலாந்து அணியின் ஜானிபிரிக்ஸ் சாதனையை முறியடித்துள்ளார்.

கொழும்பில் பாகிஸ்தான் அணிக்கெதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இலங்கை விளையாடி வருகிறது.

இதன் முதல் இனிங்ஸில் இலங்கை இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹெரத் 33.1 ஓவர்களில் 127 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 9 விக்கெட்டுகளை அள்ளினார்.

இதன் மூலம் இடக்கை பவுலர்களில் ஒரு இனிங்ஸில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரர் என்ற பெருமையை பெற்றார் ரங்கன ஹெரத்.


இதற்கு முன்பு 1889 ஆம் ஆண்டு இங்கிலாந்து இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஜானி பிரிக்ஸ் தென்ஆபிரிக்காவுக்கு எதிராக 11 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 8 விக்கெட் எடுத்ததே இந்த வகையில் உலக சாதனையாக இருந்தது.

இதைத் தொடர்ந்து ஜானி பிரிக்ஸ் தன் வசம் வைத்திருந்த 125 ஆண்டு கால சாதனையை ஹெரத் முறியடித்தார்.

இது மட்டுமல்லாது பாகிஸதானுக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இலங்கையின் பந்துவீச்சாளர் என்ற பெருமையை முரளிதரனிடம் இருந்து (16 டெஸ்டில் 80 விக்கெட்) ஹெரத் தட்டிப்பறித்துள்ளார்.

ஹெரத் இந்த அணிக்கு எதிராக இதுவரை 17 டெஸ்டில் விளையாடி 83 விக்கெட்டுகள் கைப்பற்றி இருக்கிறார்.

சுழற்பந்து வீச்சு ஜாம்பவான் முரளிதரனுக்கு பிறகு (2 முறை 1998 ஆம் ஆண்டு மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில்) இனிங்ஸில் 9 விக்கெட் கைப்பற்றிய 2 ஆவது இலங்கை பந்து வீச்சாளர் என்ற சிறப்பையும் ஹெரத் பெற்றார். (க)



# 67 வருடங்களுக்கு பின்னரான கோலியின் புதிய சரித்திரம்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் தொடரை இந்தியா 1:3 என்ற கணக்கில் இழந்தது. அதோடு கடைசி இரண்டு போட்டிகளில் படுதோல்வி அடைந்தது. இந்த 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 4 ஆவது வீரராக களம் இறங்கிய விராட் கோலி மொத்தம் 10 இனிங்சில் 134 ஓட்டங்களே எடுத்துள்ளார்.

நாட்டிங்காமில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 1, 8 ஓட்டங்களும், லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் 25, 0 ஓட்டங்களும், சவுத்ஆம்ப்டனில் நடைபெற்ற 3 ஆவது போட்டியில் 39, 28 ஓட்டங்களும், மான்செஸ்டரில் நடைபெற்ற 4 ஆவது டெஸ்டில் 0, 77 ஓட்டங்களும், ஓவலில் நடை பெற்ற 5 ஆவது டெஸ்டில் 6, 20 ஓட்டங்களும் எடுத்தார்.

இவர் 10 இன்னிங்சில் மொத்தம் 134 ரன்கள் மட்டுமே எடுத்தார். கோலியின் சராசரி 13.4 ஆகும்.

இதற்கு முன் 1947-48 ஆம் ஆண்டு சந்து சர்வத் 10 இனிங்சில் விளையாடி 100 ஓட்டங்கள் எடுத்தார். இவரது சராசரி 10 ஆகும்.

இதுவே டெஸ்ட் போட்டியில் 4 ஆவது வீரராக களம் இறங்கில் இந்திய வீரர் எடுத்த குறைவான சாராசரியாகும். இந்த மோசமான சாதனைக்கு அடுத்தபடியாக கோலி 134 ஓட்டங்கள் எடுத்து 2 ஆவது இடத்தில் உள்ளார். 67 வருடங்களாக 4 ஆவது விக்கெட்டுக்கு இறங்கும் முன்னணி வீரர் இவ்வளவு மோசமாக விளையாடியது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியுடன் விடைபெற்றார் மஹேல



பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய இலங்கை அணி, 17 ஆண்டுகள் டெஸ்ட் போட்டிகளில் பிரகாசித்த மஹேல ஜெயவர்த்தனவிற்கு வெற்றியுடன் டெஸ்ட் அரங்கிலிருந்து பிரியாவிடை அளித்துள்ளது.

போட்டியின் பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது 17 ஆண்டு காலம் டெஸ்ட் அரங்கில் பிரகாசித்த சிரேஷ்ட வீரர் மஹேல ஜெயவர்தனவிற்கு இலங்கை கிரிக்கெட்டின் சார்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நினைவுப்பரிசு ஒன்றையும் வழங்கினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நாலந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், எஸ் எஸ் சி கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் சார்பாகவும் மஹேல ஜெயவர்தனவிற்கு ஞாபகார்த்த சின்னங்களும் வழங்கப்பட்டன.

1997 ஆம் ஆண்டு டெஸ்ட் அறிமுகத்தை பெற்ற மஹேல ஜெயவர்த்தன தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முக்கிய மைதானமான எஸ் எஸ் சியில் தனது இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை 149 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மஹேல ஜெயவர்தன 11 ஆயிரத்து 814 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன், டெஸ்டில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் ஏழாம் இடத்தை பிடித்துள்ளார்.

அத்துடன் டெஸ்ட்டில் அதிக பிடிகளை எடுதத வர்ர்களின் பட்டியலில் இரண்டாம் இடத்திலுள்ள மஹேல ஜெயவர்தன உள்ளார். அவர் இதுவரை 205 பிடிகளை எடுத்துள்ளார்.

இதனிடையே டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்ட இணைப்பாட்டத்தை பெற்றவர்கள் வரிசையில் குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்தன ஆகியோர் இரண்டாம் இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

## இலங்கையை...

உள்ளூர் நடவடிக்கைகள் முழுமை பெறுவதற்கு முன்னர் அதற்கான கால அவகாசத்தை வழங்காமல் ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது என்பது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானதாகும்.

இலங்கை மக்களுக்கு விருப்பமில்லாத செயற்பாடுகளில் அரசாங்கத்தை ஈடுபடுத்துவதற்காக அதன் மீது அழுத்தங்களை கொடுக்கும் நோக்குடனான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச தலையீடுகளை எதிர்க்கிறோம்.

விடுதலைப் புலிகளை தோற்கடித்ததற்கு பழிவாங்குவதற்காக வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடா இதுவென சில இலங்கையர்கள் சந்தேகமடைந்துள்ளனர்.

இலங்கை, நிலைமையை சுமுகமாக்க கூடிய நீதி நிலைநாட்டப்படுவதையே விரும்புகிறது. தண்டனை வழங்கும் நோக்கிலான நீதியை அது விரும்பவில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நோக்கம் இதுவாகவேயுள்ளது. விசாரணைக்காக அமைக்கப்பட்ட குழுகூட ஐ.நாவால் வழங்கபபட்ட ஆணைக்கு மாறானதாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## நிறைவேற்று...

பின்னர், நிறைவேற்று அதிகாரம் காரணமாக ஜனநாயக நிர்வாகத்திற்கு அவசியமான சகல நிறுவனங்களும் செயலற்றதாகி விட்டன.

உயர்நீதிமன்றம், இலஞ்ச ஆணைக் குழு, தேர்தல் நடத்தப்படுவது, அரச நிர்வாகம் என அனைத்திலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதனால், ஜனாதிபதி பதவியை மாத்திரமல்ல, அதனுடன் சம்பந்தப்பட்ட சகலமும் நீககப்பட வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாக கூறுகின்றோம். இதனை செய்யாமல், நாட்டில் ஜனநாயக நிர்வாகத்திற்கான இடத்தை பெற முடியாது.

இந்த பதவியை ஒழித்து அடுத்து உருவாக்கப்படும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஜனநாயகம், மனித உரிமை என சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டு, தேசிய பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் அதிகார பரவலாக்கம் என அனைத்தும் உள்ளடக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிக்க நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம் எனவும் சம்பந்தன் கூறியுள்ளார். (எ-11)

## தமிழ்த் தேசிய...

வார்த்தை நடத்துவார்.

இச்சந்திப்பு எதிர்வரும் ஒக்ரோபர் மாத இறுதியிலோ அல்லது நவம்பர் மாத ஆரம்பத்தில இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ராஜிதவுக்கு...

ரத்ன தனது அரசியல் பலத்தை நிரூபித்து காட்டியுள்ளார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, மகிந்த அமரவீர, பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

இதனிடையே அமைச்சர்கள் முன்னணி என்ற பெயரில் அமைச்சர்கள் இணைந்து அடிப்படைவாத அமைப்புகளிடம் இருந்து பௌத்த சமயத்தை காப்பாற்றும் நோக்கில் நாடு முழுவதும் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்க உள்ளதாக தெரியவந்துள்ளது.

ராஜித சேனாரத்ன, மேர்வின் சில்வா, சாலிந்த திஸாநாயக்க, ஜனக்க பண்டார தென்னகோன், துமிந்த திஸாநாயக்க, திலங்க சுமதிபால உள்ளிட்டோர் இது சம்பந்தமான அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## நாடாளுமன்ற...

18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். ஆயினும், இந்தத் திகதி இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவரும் நாடாளு மன்றத்தில் உரையாற்றுவார் என்று சந்திம வீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இதுவரை எட்டு நாடுகளின் தலைவர்கள் உரையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நவநீதம்பிள்ளை...

யுள்ளனர்.

இந்த 33 பேரில் எம்.கே.சிவாஜிலிங்கம், பொன்னுத்துரை ஐங்கரநேசன், பாலசுப்பிரமணியம் டெனீஸ்வரன், தம்பிராஜா குருகுலராஜா, அந்தோனி ஜெயநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஞானமுத்து கிருஸ்ண பிள்ளை, குமாரசாமி நாகேஸ்வரன், ராசையா துரைரத்தினம், அனந்தி சசிதரன் மற்றும் பசுபதி அரியரட்ணம் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர். (எ-11)

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை வரதராஜன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை - வரதராஜன் (பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - மகேஸ்வரி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், Dr. இளவேணி, பார்த்தீபன் (Littleaid) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.அனுசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சிந்துஜா (நூலக உதவியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், சிவசுப்பிரமணியம் (கனடா), விஜயகுமார் ஆகியோரின் சகோதரரும், தேனுசானின் (British Business Collage) பேரனும், யமுனாவதி, காலஞ்சென்ற பானுகலா (கனடா), Dr. சாந்திகுமார் (லண்டன்), ராஜசிங்கம், சாந்தநிதி (லண்டன்), கிரிதரன், சிறிதரன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜனார்த்தனி (லண்டன்), செந்தூரன், பிரகாஸ், கோகுலன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், மயூரன் (டுபாய்), அபிராமி (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), ஸ்ரீகஜன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.08.2014) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று 12.00 மணியளவில் DCM கல்வி நிறுவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

215, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல் : மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்

(7447)

## பொது பல...

பல சேனாவை விமர்சிக்கும் தகுதி இல்லை என்றும், முஸ்லிம், கிறிஸ்தவ தீவிரவாதிகளுக்கு எதிராக செயற்படும் எம்மை இவர்கள் இனவாதிகளாகவே பார்ப்பார்கள் என அவர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணையத்தளத்தில் வெளியான புகைப் படத்தில் இருப்பது நானில்லை. பௌத்தம் என்னை காக்கும் போது தற்காப்புக் கலை எனக்கு அவசியமில்லை பொது பல சேனா அமைப்பினர் இனவாதிகள் என்றால் நாம் அடக்கு முறைகளையா கையாளுகின்றோம் என தெரிவித்தார்.

மன்னார் ஆயரும் முஸ்லிம் உலமாக்கலும் செய்வதன் பெயர் என்ன? நாம் நாட்டை காப்பாற்றவும் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களை காப்பாற்றவும் போராடுகின்றோம்.

ஆனால் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் புலம்பெயர் தமிழ் இயக்கங்களுடனும் அமைபபுகளுடனும் இணைந்து நாட்டிற்கு எதிரான தேச துரோக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்.

தற்போதும் காணாமல் போனோர் தொடர்பில் பொய்யான சாட்சியங்களை தயாரித்து சர்வதேச விசாரணைக்குழுவிற்கு சாதகமான முறையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கின்றார் என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## இலங்கைக்கு...

போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அபிவிருத்தியடைவதற்கு இயற்கை வளங்களில் தங்கியிராமல் மனித வளத்தின் மீது தங்கியிருக்க வேண்டும். இயற்கை வளங்களின் மீது தங்கியிருக்கும் நாடுகள் வளர்ச்சி பெறும் என்றால் பெருமளவு எண்ணெய், எரிவாயு, வைரம், தங்கம், பிளாட்டினம் போன்ற வளங்களைக் கொண்டுள்ள ஆபிரிக்க நாடுகள் செல்வச் செழிப்பில் இருக்க வேண்டும். ஆனால் அவை வறுமை நிலையிலேயே உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

## நீதியின் துஷ்...

நாடுகள் கொடுத்து வரும் அழுத்தமே இலங்கை எதிர்கொள்ளும் மிகப் பெரும் சவாலாகவுள்ளது. எனினும் அரசாங்கம் சர்வதேச சமூகத திடமிருந்து தன்னை தனிமைப்படுத்த முயலவில்லை.

ஐ.நா.விசாரணையானது குறிக்கோள் அற்றது. அது நீதியின் பரிகாசம் எனவும் இதனால் இலங்கை அதிகாரிகள் அதற்கு உதவ முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.விசாரணைக் குழு விசாரணைக்கான ஆதாரங்களை மக்களிடம் இருந்து இரகசியமான முறையில் கேசகரித்து வருகிறது.

எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம் தன்னை சர்வதேச சமூகத்திடம் இருந்து தூர ஒதுக்கிக்கொள்ள முயற்சிக்கவில்லை எனவும அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடனான தொடரை வென்று ஜெயவர்த்தனவை இழந்தது இலங்கை



பாகிஸ்தான் அணிக்கெதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 105 ஓட்டங்களால வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

17 ஆண்டுகள் டெஸ்ட் போட்டிகளில் பிரகாசித்த மஹேல ஜெயவர்த்தனவிற்கு வெற்றியுடன் டெஸ்ட் அரங்கிலிருந்து பிரியா விடை அளித்துள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் 271 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 165 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுகளையும் இழந்தது.



இந்தப் போட்டியில முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தமது முதல் இன்னிங்சில் 320 ஓட்டங்களைப் பெற்றதுடன் பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 332 ஓட்டங்களைப்பெற்றது.

இலங்கை தனது இரண்டாவது இனிங்ஸில் 282 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்நிலையில் 271 ஓட்டங்கள் என்ற இலக்கு பாகிஸ்தான் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போட்டியின ஆட்டநாயகனாகவும் தொடர் நாயகனாகவும் இலங்கை அணியின் ரங்கன ஹேரத் தெரிவானார். (க)


## காணி விற்பனை

சங்கானை வீதி, பத்தமேனி அச்சுவேலியில் 22 பரப்பு விவசாயம் செய்வதற்கும் பண்ணைகள் அமைப்பதற்கும் உகந்ததுமான தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:0776921084

(7445)

## நல்லூர் கால விசேட சலுகை

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | 20000/= | One way |
| கொழும்பு – சென்னை | 21900/= | Return |
| கொழும்பு – திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு – டோகா | 26000/= | One way |
| கொழும்பு – அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு – மலேசியா | 32000/= | Return |
| கொழும்பு – சிங்கபூர் | 30500/= | Return |
| கொழும்பு – பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு – ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு – லண்டன் | 93500/= | Return |
| கொழும்பு – சுவிஸ் | 98000/= | Return |
| கொழும்பு – கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna

128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

Mobile 0773083820 www.nationtravels.com

Hot line 0114651199 Jaffna 0214920920

(சி-8236)

யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in

- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

Why Choose BCAS for QS & Civil Engineering?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

(சி-8235)

BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.

021 221 9910 / 077 710 2131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## அதிரடியாக அபூர்வமான கட்டணக் குறைப்புக்கள்

UK இல் படிக்க உழைக்க IELTS தேவையில்லை -50000.00 கட்டணக்குறைப்பு ஒருவருக்கு மட்டுமே

கனடா 3 வருட விசா படிக்க உழைக்க -2 இலட்சம் குறைப்பு

20.08.2014 வரை மட்டுமே

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(7446)

சாய்ந்துவிட்ட பொருளியலின் இமயத்திற்கு எம் இதய அஞ்சலிகள்



பொருளியல் பேரசான் அமரர் S.வரதராஜன்

(C-8237)

D.C.M ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்.

நல்லூரான் அருள் பரவட்டும் அகிலமெலாம்

உங்கள் அபிமான புதிய தலைமுறை ஐஸ்கிறீம் நிறுவனமாகிய

SYLO ICE CREAM

(Sweet your Life orbit)

நல்லூர் முன் பருத்தித்துறை வீதியில் இல. 521 C கட்டடத்தில் விழாக்கால விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

நம்பகமான Pasterzed மற்றும் Homeginezed முறைப்படி 100% சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பல வகை ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழுங்கள்.



521 C, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

இல. 76, அம்மன் வீதி, கொக்குவில். 021-4926003

(7207)

## முக்கிய அறிவிப்பு




உலக சாதனை நிகழ்வு மார்கழி 01 ஆரம்பம். இடம் : சாவகச்சேரி, ஏ9 பிரதான வீதி. 50 பரப்பளவு கொண்ட காணியில் இச்சாதனை இடம்பெற உள்ளது.

01 வருடகாலத்துக்கு இது இடம்பெறும். அதற்குள் சிற்றுண்டி சாலைகள் குத்தகைக்கு விடப்பட உள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் இந்த இடத்துக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி : இல. 426 (780), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல : 021 730 6070

(C-8224)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அச்சு ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.